
www.padippakam.com

Thevan

# நாங்கள்





**GUYS மாணவர் இளைஞர் பொது மன்றம்**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# சொல்கிறோம்

□ மலர் 6 & 7 □ இணைந்த இதழ்கள் □

எமது சமுதாயத்தின் ஒழுங்கமைப்பின் மரபுவழி, அதாவது பாரம் பரியமான வழக்கங்களில் பாரிய மாற்றங்களைக் காட்டும் சம்பவங்களும், செயற்பாடுகளும் அடிக்கடி நிகழ்கிறது. நாம் அடிக்கடி பார்க்கும் இத்தகைய சம்பவங்கள் ஒரு சமூக மாற்றத்தின் அறிகுறிகள் என்பது நிச்சயம். இந்த மாற்றங்களை உய்த்துணர முடியாத பெற்றோருக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் இடையில் ஒரு பெரும் இடைவெளி ஏற்பட்டு வருவதனைப் பொதுவாக புரிந்துகொள்ள முடிகிறது. இதே போல் இந்த சமூக மாறுதலின் சகல விழுமியங்களையும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாதவர்களினால் பல்வேறு மட்டங்களில் கருத்து ரீதியான-செயல் ரீதியான மோதல்களும் ஏற்பட்டும் போகிறது. இச்சமூக அமைப்பின் மாறுதலை சரிவரப் புரிந்துகொள்ளாமையே-பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் விலகிச் செல்வதற்கும், விடுதலையை நாடிய இயக்கங்களிடையே மோதல்கள் உருவாவதற்கும், இயக்கத்திலிருந்து தோழர்கள் தப்பிச் செல்வதற்கும் இன்னபிற செயல்களுக்கும் அத்திவாரமாகிறது.

பெற்றோருக்கும்-பிள்ளைகளுக்கும் இடையே இதுவரை நிலவி வந்த எழுதப்படாத உடன்படிக்கைகளின் அத்திவாரம் ஆட்டம் கண்டுவிட்டது. அதாவது பிள்ளைகள் என்போர் பெற்றோருக்கு அடங்கி, அவர்கள் சொன்னவற்றையே செய்து, அவர்கள் திட்ட

படிப்பகம்

www.padippakam.com



மிட்டபடிதான் வாழவேண்டும் என்றிருந்த நிலை மாறிப்போகிறது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலம் எப்படியாகும் என்பது குறித்து எதுவித உத்தரவாதமும் வழங்க முடியாமல் கையாலாகா தோராய் உள்ளனர். பெற்றோரின் இக்கையறு நிலையில் தமக்கென ஒரு எதிர்காலத்தைச் சிருஷ்டிக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு ஒவ்வொரு இளைஞனின் தோள்களிலும் வலிந்து சுமத்தப்பட்டுள்ளது. இதனைப் புரியாத பல பெற்றோரும் ''இங்கே இருந்தால் இயக்கத் துக்கு போடும் பிள்ளை; ஆனபடியால் என்ன செலவழிச்சு எண்டாலும் வெளியிலை அனுப்பிப் போடுவம்'' என்று படாதபாடு படுவதைப் பார்க்கலாம். உண்மை என்ன? எந்த வெளிநாடு போனாலும் முத லில் கோரும் அடைக்கலத்திற்கு இங்கே எமது சமூகத்திற்கு இழைக் கப்படும் கொடுமைகள், அதில் தானும் சம்பந்தப்பட்டு இருக்கும் விதம் என்பன குறித்துக் கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கொடுமைகளுக்கு பயந்து நெடுந்தூரம் போவதை விடுத்து நேருக்கு நேர் முகங்கொடுக்கும் துணிவுமிக்கோராய் இளைஞர் சமுதாயம் வளரவேண்டியிருக்கிறது.

இந்த துணிவையும், எதிர்ப்பு மனோபாவத்தையும் பல பெரி யோர்களும் தவருகவே புரிந்துகொள்கிருர்கள். பகையுணர்வும், வெறுப்பும் விரக்தியும் கொண்டதாக இளைஞர் சமுதாயம் வளர்வ தாக இவர்கள் கவலையடைகிருர்கள். சோதனையும், வேதனையும் மிக்க சூழலில் வளரும் இளைஞர் சமூகம், வெளித்தாக்கங்களால் பாதிக்கப்படாமல், வாழ்வின் ஒவ்வொரு சூழலிலும் அவதானமாக விருந்து தத்தம் எதிர்காலத்தைச் சிறப்பாக்க வேண்டும் எனப் பெரி யோர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

எனினும் இன்றைய இளைஞர்களாகிய நாம், குறுகிய சுயநல வட்டங்களிலிருந்து வெளியேறி சமூகத்தின் ஒரு அங்கத்தவன் என்ற வகையில் எமக்கிருக்கும் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறை வேற்ற வேண்டியவர்களாயுள்ளோம். கேடுகெட்ட இன்றைய சமுதாய அமைப்பின் குறைபாடுகளை அகற்றிப் புதிய யுகத்தைப் படைக்கும் ஆற்றலையும், வலுவையும் வளர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. முழுமன ஈடுபாட்டுடன் எதிர்கால சமுதாய வளர்ச்சிப் போக்கில் எமது பங்களிப்பை நல்க வேண்டியிருக்கிறது. எமது சூழலில் வாழும் சகலரது பிரச்சனைகளிலும் அக்கறை உள்ளவர்களாக இந்தப் பிரச் சனைகளின் தீர்வு குறித்து சரியான கோணத்தில் சிந்திப்பவர்களாக எமது கடமையை உணர்ந்து பொறுப்புள்ளவர்களாக நாம் ஒவ் வொருவரும் மிளிருவதன் மூலம் புதிய அமைப்புக்கு வித்திடுவோம் என்று இளைஞர் ஒவ்வொருவரையும் ''நாங்கள்'' அழைக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

தொடர்ச்சியான இக்கட்டுரைத் தொடரின் வரிசையில் இவ் விணைந்த இதழில் மனிதவளம், நீர்வளம் பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளது. எமது மண்ணின் ''மனிதவளம்' ஸ்ரீலங்க அரசின் ''இனமழித்தல்'' கொள்கை மூலம் அடைந்து வருகின்ற வீழ்ச்சிப் போக்கினையும், இதனை ஆராய்ந்து நாளைய ஈழத்தின் விடியலில் எமது பொருளாதார நிலைப்பாட்டினையும் கட்டியமைக்க வேண்டிய நிலையில் ''நாங்களும் நீங்களும்'' நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். தொடர்ந்து நாளைய பொருளாதார மேம்பாட்டிற்கான அடிப்படை ஆராய்ச்சி வரிசையில் நீர்வளம் பற்றியும் ஆராய்ந்துள்ளோம்.

## மனித வளம்

மனித வளம் என்பது ஒரு நாட்டில் உள்ள மொத்தச் சனத்தொகையின் அளவினைக் குறித்து நிற்பதாகும். ஆனால் மனிதவலு என்பது அந்நாட்டில் அல்லது அப்பிரதேசத்தில் காணப்படுகின்ற சனத்தொகையின் தொழிற்பாட்டினைக் குறிப்பதாகும். மனிதவளம் எந்தளவிற்கு அதிகரிக்கின்றதோ அந்தளவிற்கு ஏற்ப மனித வலுவும் அதிகரித்துக் காணப்படும். ஈழப்பிரதேசத்தின் மனிதவளம் பற்றி ஆராய்கின்றபோது இதனை பல வகையாக பிரித்து அதாவது பிரதேச ரீதியாக, பால் ரீதியாக, வயது அடிப்படையாக, உற்பத்தி துறைகள் ரீதியாக, கிராம, நகர ரீதியாக, கல்வியடிப்படையாக, தொழில் நுட்ப வளர்ச்சி ரீதியாக வகுத்து ஆராயலாம். இந்த வகையில் ஈழப்பிரதேசத்தின் மொத்த மனிதவளமானது 1963ஆம் ஆண்டு 36,38,500 பேர்களாகவும், 1971ஆம் ஆண்டு 43,65,500 பேர்களாகவும், 1981ஆம் ஆண்டு 50,29,400 பேர்களாகவும் காணப்பட்டது. இத்தரவுகளினடிப்படையில் பார்க்கின்றபோது ஈழப்பிரதேசத்தின் மனித வளமானது வருடா வருடம் அதிகரித்து வருவந்தை உணரமுடிகிறது.

# மலரப்போகும் ஈழம் பொருளாதாரச் சுமையைத் தாங்குமா?

தொடர் கட்டுரை □ சென்ற இதழ்த் தொடர்ச்சி

www.padippakam.com



## பிரதேசரீதியான குடித்தொகைப் பரம்பலும் பிறப்பு இறப்பு வீதமும்

| | குடித்தொகை (000) | | பிறப்பு இறப்பு வீதம் 1978 | |
|---|---|---|---|---|
| | 1971 | 1981 | பிறப்பு | இறப்பு |
| யாழ்ப்பாணம் | 704.3 | 838.4 | 29.8 | 5.6 |
| மன்னார் | 77.9 | 112.5 | 38.4 | 5.9 |
| வவுனியா } | 95.5 | 96.2 | 40.5 | 5.5 |
| முல்லைத்தீவு } | — | 77.5 | — | — |
| மட்டக்களப்பு | 258.1 | 330.9 | 38.7 | 8.1 |
| அம்பாறை | 272.8 | 388.8 | 83.9 | 5.5 |
| திருகோணமலை | 192.0 | 256.8 | 37.1 | 4.3 |
| பதுளை | 616.3 | 642.8 | 25.8 | 6.2 |

மேற்காட்டப்பட்ட அட்டவணை மூலம் ஈழப்பிரதேசத்தின் மனித வளமானது பத்து ஆண்டுகளில் எவ்வளவிற்குஅதிகரித்துள்ளது என் பதையும், இப்பிரதேசத்தின் மனிதவள அதிகரிப்பு என்ன வீதத்தில் காணப்படுகிறது என்பதையும் அவதானிக்க முடிகிறது. இங்கு மனிதவளம் அதிகரிக்கின்றபோது மனித வலுவும் தன்னிச்சையாக வளர்ச்சியடைந்து வருகிறது. இவ்வாறு வளர்ச்சியடைந்து வருகின்ற போது மனிதவலுவானது உற்பத்திகளில் சரியான முறையில் பயன் படுத்தப்படாது விடப்படுகின்ற தன்மைகள் காணப்படுகின்றன.

பால் ரீதியாக நோக்குகின்றபோது ஆண்களைவிட பெண்களே அதிகமாகக்காணப்படுகின்றனர். உதாரணமாக 1981ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் 95.9% ஆண்களாக வும், 96.9% பெண்களாகவும் காணப்படுகின்றனர். ஏனைய மாவட் டங்களைப் பொறுத்தும், பொதுவாக ஈழப்பிரதேசத்தில் பெண்கள் அதிகவீதத்தில் காணப்படுவதை பின்வரும் அட்டவணை தெளிவாக்கு கிறது.

www.padippakam.com



மாவட்டங்களில் பிறந்த ஆண்-பெண்
குடித்தொகை வீதத்தில்

| | 1981 | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| யாழ்பாணம் | 95.9 | 96.9 |
| மன்னார் | 72.5 | 81.6 |
| முல்லைத்தீவு } | 57.4 | 62.6 |
| வவுனியா } | — | — |
| மட்டக்களப்பு | 93.8 | 96.7 |
| அம்பாறை | 81.0 | 85.8 |
| திருகோணமலை | 74.2 | 80.0 |
| பதுளை | 91.8 | 92.6 |

இவ்வாறு காணப்படும் ஈழப்பிரதேசத்தின் மனிதவளத்தை கிராம நகர ரீதியில் நோக்குகின்றபோது கிராமங்களிலும், நகரங்களிலும் பொதுவாக பெண்கள் தொகையே கூடுதலாக காணப்படுகின்றதையும், நகரத்தைவிட கிராமப் பகுதிகளிலேயே இவர்கள் தொகை கூடுதலாலக் காணப்படுகின்றதையும் காணலாம். அத்துடன் மொத்த மனித வளத்தில் கிராமப்பகுதிகளே கூடிய பங்கை வகிப்பனவாகவும் இருக்கின்றன. எனினும் படிப்பறிவு படைத்த மனிதவளம் நகரப்பகுதிகளைச் சார்ந்தே காணப்படுகின்றது. கிராமப்பகுதிகளில் கல்வியறிவு குறைந்த மனிதவளங்கள் தான் கூடுதலாக காணப்படுகின்றன. எனவே பொதுப்பட நோக்குமிடத்து ஈழப்பிரதேசத்தில் கல்வியறிவுடைய மனித வளங்கள் காணப்பட்டாலும் கூடுதலானளவு கல்வியறிவு குறைந்த மனிதவளங்களும் மனித வலுக்களுமே தேங்கிக் காணப்படுகின்றதெனலாம்.

தொழிற்துறை ரீதியான மனித வளப்பரம்பலை அவதானிக்கின்றபோது விவசாயத்திற்தான் அதிகமானோர் ஈடுபட்டிருப்பதை தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஈழப்பிரதேசம் விவசாய நடவடிக்கை சார்ந்த பிரதேசமாக காணப்படுவது இதற்கொரு காரணமாகும். கூடிய அளவு மனித வளங்கள் கீழ் உழைப்பு நிலையிலும், தங்கி வாழும் நிலையிலும் காணப்படுகின்றனர். ஏனெனில் விவசாய உற்பத்தியானது குறிப்பிட்ட எல்லைக்கப்பால் எத்தனை தொழிலாளர்களை ஈடுபடுத்தினாலும் அந்நிலத்திலிருந்து கூடிய உற்பத்தியை

படிப்பகம்

www.padippakam.com



பெறமுடியாது. அத்துடன் மனிதவளம் பெறுவதற்கு ஏற்ப உற்பத்தித் துறைகள் விருத்தியடையாமை கீழுழைப்பு நிலையினையும், தங்கி வாழும் நிலையினையும் ஏற்படுத்துகிறது.

மாவட்ட ரீதியாக தொழில் பரம்பல் (வீதம்)
1981

| மாவட்டங்கள் | விவசாயம் | விவசாயம் தவிர்த்த ஏனைய துறை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 41.9 | 58.1 |
| மன்னார் | 60.6 | 39.4 |
| முல்லைத்தீவு<br>வவுனியா | 64.0 | 36.0 |
| மட்டக்களப்பு | 53.3 | 46.7 |
| அம்பாறை | 58.6 | 41.4 |
| திருகோணமலை | 51.3 | 48.7 |

ஈழப் பிரதேசத்திலுள்ள பல்வேறுபட்ட வளங்கள், தொழிற்துறைக்கான வசதிகள் இருந்தும் மனித மூலவளம் பயன்பாடானது. வீணடிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. கீழுழைப்பு அதாவது ஒருவர் செய்யும் வேலையை மூன்று பேர் சேர்ந்து செய்தல், இதனால் முழுமையான வேலைவாய்ப்புக் கிடைக்காமற் போவது மட்டுமின்றி, மனிதவலு ஒழுங்காகப் பயன்படுத்தப் படாமையால் ஒருவரது உழைப்

மாணவர் மத்தியில் சிந்தனை தெளிவினை ஏற்படுத்து முகமாக உங்களின் ஆக்கங்களிலேயே 'நாங்கள்' கருக்கொண்டு உருப்பெற்று வருகின்றது. உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும் 'நாங்கள்' வரவேற்கின்றது.

- ☐ கருத்துக்கள் தர்க்கீக ரீதியாக அமையட்டும்.
- ☐ வெளிப்பாடுகள் புதிய அம்சங்களை கூறட்டும்.
- ☐ ஒடுக்கப்படும் மக்களுக்கு உங்கள் கருத்துக்கள் வழியினைச் சமைக்கட்டும்.

ஆக்கங்கள், விமர்சனங்கள் 'நாங்கள்' வந்த வழியிலேயோ அல்லது வேறு தெரிந்த அங்கத்தவர்கள் மூலமாகவோ கிடைக்கச் செய்யுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ரி மூன்று பேருக்கு மேல் த
பொதுவாக உழைக்கும் சக்
...ருக்குட்பட்டவர்களாகும். இ
அட்டவணையில் அ...தானிக்
உழைக்கும் திறனுடையோர் ெ

| | 20-24 5-29 | 30- |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 5.55-7 | 4. |
| மன்னார் | 33.91.9 | 35.4 |
| முல்லைத்தீவு } வவுனியா | 46.0.5 | 56.0 |
| மட்டக்களப்பு | 87.6 | 9.6 |
| அம்பாறை | 39.10 | 39.5 |
| திருகோணமலை | 41.18 | 50.3 |
| பதுளை | 12.18 | 17.2 |

மேற்காட்டப்பட்ட அட்டமூலம் மனிதவலு
ளளவு ஈழப் பிரதேசத்தினுள்ப்படுவதை எடுத்
போதும் இவ்வளத்தினுடைய்பயன்பாடும் இ
குறிப்பிட்டளவு மனித வளமே தியில் ஈடுபடுத்தப
மனிதவலுக்கள் வீண்விரயம் ப்படுவதுமாக கா

இவ்வாறு மனித வளமாற்பத்தியில் ஈடுப
காணப்படுகின்றமைக்கு பல ங்கள் உள்ளன.
கள் உருவாக்கப்படாமை (சிறாரிய), பருவகால மா
ஏற்ப தொழில் வாய்ப்புக்கள் மை (விவசாயம், உ
யாணம்), நாட்டில் தொழிற் முறையாக வழங்க
(உ+ம்: விவசாயக் கல்வி), உதி, வியாபார நிறுவ
மந்த நிலைகள், அபிவிருத்தித் ங்கள் ஏற்படுத்தபடா
டாயமாக வேலையில் மனித வலு சமபங்கீடு கொடுக்கப்
மூலவளங்கள் கண்டுபிடிக்கப்மையும், பயன்படுத்தப்
யும், கல்வித் திட்டங்கள் பட்டுக் காணப்படுகி
போன்ற முக்கிய குறைபாடுகளிமனிதவலுவானது ஈழப்
சத்தில் மட்டுமின்றி இலங்கையிலூட முற்று முழுதாக
படுத்தப்படாது வீணடிக்கப்படுகிற

www.padippakam.com



# நீர்வளம்

வகையான இயற்கை வளங்களோடு பார்க்கும்பொழுதும் ...ணக்கூடிய ஒரு வளமாக நீர் காணப்படுகின்ற பொழு ...னித வாழ்க்கையைப் பொறுத்தவரையில் இது மிகவும் ..., பெறுமதி மிக்கதுமான ஒரு வளமாகக் காணப்படுகின்றது. ... காரணம் கிடைக்கும் நீரை எல்லாவகையான தேவைக் ...பயன்படுத்த முடியாதிருப்பதாகும். நீரின்றேல் உயிரினங்கள் ...டியாது. அத்துடன் இதன் பெறுமதியும் அளவிடமுடியாத ...

...மனித வாழ்க்கையில் குடிப்பதற்கும், கழுவும் தேவைகளுக்கும், ...ப்பதற்கும் கழிவுப் பொருட்களை வெளியில் தள்ளுவதற்கும், ...ர்ச் செய்கைக்கும், உணவு உற்பத்திக்கும், தொழிற்சாலைகளை இயக் ...வதற்கும் இன்னும் பல தேவைகளுக்கும் நீர் அத்தியாவசியமான ...ரு வளமாகக் காணப்படுகின்றது. மக்கட் குடியிருப்புகளும், பரம்

## மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் எந்த ஒரு நிகழ்ச்சியையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் வகையிலான அத்தியாவசியமற்ற பகிஸ்கரிப்புகளுக்கு மாணவரை வற்புறுத்தல், பாடசாலை உபகரணங்களைக் கொள்ளையிடல், பாடசாலை வகுப்பு நேரத்தில் அனுமதியின்றி பலவந்தமாக அரசியல் வகுப்புக்களை நடாத்துதல் போன்ற அராஜகமான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன.

கடந்த 22-07-1985 அன்று மூதூர் அந்-நகார் மகளிர் மகா வித்தியாலயத்தில் அத்துமீறி நடந்த சம்பவம் மாணவர்களின் கல்விக்கு ஒரு அச்சுறுத்தல் நிகழ்ச்சியாக அமைந்ததைச் சுட்டிக் காட்டி, தொடர்ந்தும் இத்தகைய எமது எதிர்கால சிற்பிகளின் கல்வியைப் பாதிக்கும் எந்தவொரு நிகழ்ச்சியையும் தொடரா வேண்டாமென்று சம்மந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுகிறோம்; தொடர்ந்தும் இத்தகைய செயல்கள் இடம்பெற்றால் ஒன்றுபட்ட மாணவ இளைஞரின் எழுச்சியை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என எச்சரிக்கின்றோம்.

(மூதூர் பிராந்திய GUYS இனால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம்)

www.padippakam.com



பலும் இத்தகைய காரணங்களினுற்ருன் நீர் வளங்கள் உள்ள பாகங்களை நோக்கி அமைந்தது.

தமிழர் வாழும் பிரதேசங்களில் நீர்வளங்களை மதிப்பீடு செய்தலும், கண்டறிதலும் இப்பாகங்களின் பொருளாதார விருத்தியின் ஒரு முன்னேடித் தேவையாகும்.

இவ்வகையில், எமக்கு இயற்கையாகக் கிடைக்கும் நீர்வளங்களை அடிப்படையாக இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

அவையாவன :

1. **மேற்பரப்பு நீர் மூலாதாரங்கள்**
2. **நிலநீர் மூலாதாரங்கள்**

நீர் பெறப்படும் மூலாதாரங்கள் இவ்வகையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்ற போதிலும், இவையிரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. அதாவது மேற்பரப்பு நீர் மூலாதாரங்களிலிருந்து நிலநீரும், நிலநீர் மூலாதாரங்களிலிருந்து குளங்கள் போன்ற நீர்நிலைகளும் நீரைப் பெறுவதுண்டு.

நிலநீர் வளங்கள் அமைவதற்கு பாறையமைப்பில் சில சிறப்பியல்புகள் இருக்க வேண்டும். அதாவது எல்லா வகையான பாறைப் படைகளிலும் நிலநீர்த்தேக்கங்கள் காணப்படமாட்டா. இவ்வகையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு பாகங்களில் சில குறித்த பகுதிகளிலேயே நிலநீர்த்தேக்கங்கள் அமைவதற்கேற்ற வாய்ப்பான பாறையமைப்புக் காணப்படுகின்றது.

அவையாவன :

1. **யாழ்ப்பாணக் குடாநாடும் தீவுகளும்**
2. **புத்தளம் - வனத்தவில்லு பிரதேசம்**
3. **மன்னுர் - பூநகரி வலையம்**
4. **பரந்தன் - முல்லைத்தீவு வலையம்**

மேற்குறித்த வலையங்களைத் தவிர தமிழர் வாழும் ஏனைய பிரதேசங்களில் நிலநீர் மூலாதாரங்கள் காணப்படுகின்ற போதிலும், இவற்றின் மூலம் பெருமளவு நீரை பலவிதமான தேவைகளுக்கும் பெறக்கூடியதான புவிச்சரிதவியற் சாத்தியக்கூறுகள் இல்லையென்றுதான் கூறவேண்டும். எனினும் இதுபற்றிய மேலதிக ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



**யாழ்ப்பாணக் குடாநாடு:** யாழ்ப்பாணக் குடாநாடும் அதற்கடுத்தாயுள்ள தீவுக்கூட்டங்களும் நிலநீர்த்தேக்கங்களைப் பொறுத்த வரையில் சாதகமான புவிச்சரிதவியல் அமைப்பைக் கொண்டுள்ளன. மயோசீன் காலத்தில் உருவாகிய இக்குடாநாட்டின் பாறைகள் சுண்ணக்கல் வகையைச் சார்ந்தனவாயிருப்பதனுல், இவை நீரை உட்கசியச் செய்யக்கூடியனவாயிருக்கின்றன. மழையின்மூலம் கிடைக்கின்ற நீர் இப்பாறைப் படைகளினூடாக கீழ் நோக்கிச் சென்று நிலநீர்த்தேக்கமாக அமைகின்றது. சுண்ணக்கல் கரையக்கூடிய தன்மையையுடையதாயிருப்பதால் நிலநீர் தேங்குகின்ற குகைகளும் (Aquifers) படிப்படியாகப் பெருத்து பெருமளவு நீர் தேங்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் வருடத்தில் மூன்று மாதங்களில் கிடைக்கின்ற ஏறத்தாழ 50 அங். மழைவீழ்ச்சியின் ஒரு பகுதியே மண்படையினூடாகவும், சுண்ணும்புக்கல் படையினூடாகவும் ஊடு வடிந்து நிலநீர்த்தேக்கமாக மாறி யாழ்ப்பாணக் குடாநாட்டின் மக்கள் வாழ்க்கைக்கு உயிர்நாடியாகத் திகழ்கின்றது. இந்நீர்தான் கிணறுகளின் மூலம் எடுக்கப்பட்டு பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

வருடத்தில் மூன்று மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் ஏறத்தாழ அரைவாசிக்கும் குறைந்த பகுதிதான் இவ்வாறு நிலநீராகச் சென்றடைகின்றது. மிகுதியான நீர் ஆவியாக்கமாகவும், ஆவியுயிர்ப்பு இழப்புகளாகவும் ஏற்படுவதுடன், இன்னெரு பகுதி பல்வேறு வாய்க்கால்களின் மூலம் கடலையும் சென்றடைகின்றது. குடாநாட்டின் மேற்பரப்பில் காணப்படுகின்ற குளங்கள் ஒரு சிறு பகுதி நீரைத்தேக்கி வைக்கின்றனவாயினும், மழைக்காலம் முடிந்ததும் இவை மிக விரைவில் வற்றி விடுவதனுல் இவற்றினுல் ஏற்படும் பயன்பாடு மிகக் குறைவாகும். ஆயினும் நிலநீர்ச் சேமிப்புக்கு நீர் சென்றடைவதற்கேற்ற புனல்கள் போன்று இவை செயற்படுவதனுல் இவற்றைத் தூரவிடாது தொடர்ந்து இயங்கும் தன்மையில் வைத்துக்கொள்வது அத்தியாவசியமாகும். இவ்வகையில் இவை நிலநீர்ச் சேமிப்புக்கு உதவுகின்றன. இவை தவிர மழைக்காலத்தில் மட்டும் செயற்படும் ஓர் சிறு அருவியாக 'வழுக்கையாறு' காணப்படுகின்றது. இக்குடாநாட்டின் அமைப்பின் காரணமாக நிலநீர்த்தேக்கத்திலும் சில சிறப்பியல்புகள் காணப்படுகின்றது. குடாநாடு அதன் அமைப்பைப் பொறுத்தவரையில் வடமேற்கு நோக்கி சற்று சரிவடைந்திருப்பதுடன் நிலநீர்த்தேக்கமும் ஓர் வில்லின் அமைப்பையொத்ததாகவும், நன்னீர்ப்படையின் கீழ் உவர்நீர்த்தோற்றப்பாடும் காணப்படுகிறது. ஒரு தீவின் அமைப்பில் இக்குடாநாடு காணப்படுவதனுலேயே சூழவுள்ள கடல்நீர் நன்னீர்ப்படையின்கீழ் அமைந்து காணப்படுகின்றது. வில்லின் அமைப்பில் நிலநீர்ப்பீடம் அமைந்திருப்பதனு

படிப்பகம்

www.padippakam.com



லேயே குடாநாட்டில் கரையோரப் பாகங்களில் கிணறுகள் ஆழம் குறைந்தவையாகவும், மத்திய, வடமத்திய பகுதிகளில் ஆழம் கூடியனவாகவும் காணப்படுகின்றன.

கடந்தகாலங்களோடு பார்க்கும்பொழுது சமீப காலங்களில் இக் குடாநாட்டின் நீர்த்தேவை அதிகரித்து வந்துள்ளமையைக் காணக் கூடியதாயிருக்கிறது. மக்கள் தொகை அதிகரித்து வந்தமையும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஏனைய தொழில் முயற்சிகள் அதி கரித்தமையும் நீர்ப்பயன்பாட்டை அதிகரிக்கச் செய்துள்ளன. மேலதிக நிலங்களும் பயிர்ச்செய்கையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எனவே கடந்தகாலங்களைவிட இன்று குடாநாட்டில் நீர்ப்பயன்பாடு பன் மடங்கு அதிகரித்துள்ளது எனலாம். இதைவிட நீரை வெளியேற்றும் முறைகளிலும் இன்று பல மாற்றங்களேற்பட்டுள்ளன. அதிகளவு நீர்ப்பயன்பாட்டினுலும் நீரைக் கிணறுகளின் மூலம் வெளியேற்றும் முறைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களினுல் நீர்த்தன்மையில் வேறு பாடுகள் ஏற்பட்டுள்ளன. கடந்த காலங்களில் நம் முன்னேரால் மேற் கொள்ளப்பட்டுவந்த நீரிறைக்கும் முறைகள் கிணற்றில் நீர் ஊறு வதற்கேற்பனவாக இருந்தன. துலாமூலமும், மாடுகளைக்கொண்டு இழுக்கும் பல்வேறு ''சூத்திரங்கள்'' என அழைக்கப்படும் முறைகள் மூலமும் நீர் வெளியேற்றப்பட்டபொழுது இது கிணற்றுக்கும், நில நீர்த்தாங்கிக்கும் தீமை பயப்பதாக இருக்கவில்லை. ஆனுல் சமீப காலங் களில் மின்சக்திமூலம் இயங்கும் பம்பிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும்பகுதியில் பாவனையில் இருப்பதனுல் இவைமூலம் சிறியளவு நேரத்தில் பெருமளவு நீர் வெளியேற்றப்படுகின்றது. இதனுல் நன் னீர்ப்படை உறிஞ்சப்பட்டுவிட அதன்கீழ் இருக்கும் உவர்நீர் மேல் நோக்கி எழுந்து கிணறுகளில் ஊடுருவுகின்றது. குடாநாட்டின் நீர்ப் பீடத்தின் தன்மை ஓர் வில் போன்றிருப்பதால் இத்தகைய உவர்நீர் ஊடுருவல் முதலில் கரையோரப் பகுதிகளையடுத்த கிணறுகளிலும் உவர்நீர் ஏரிகளையடுத்த பகுதிகளிலுள்ள கிணறுகளிலுமே முதலில் ஏற்படுகின்றது. இந்நிலையினுல் காலப்போக்கில் உட்பாகங்களில் உள்ள கிணறுகளும் உவர்நீரைப் பெறுவதற்கு ஏதுவாக இடமுண்டு. அத்துடன் பல பயிர்ச்செய்கை நிலங்களில் நீரை வெளியேற்றும் நேரத்தைப் பொறுத்தும், அதனைக் கிணற்றிலிருந்து பயிர்வரை கொண்டுசெல்லும் வாய்க்காலின் தன்மையைப் பொறுத்தும் அதிக ளவு நீர் பயிர்வளர்ச்சிக்குப் பயன்படாது ஆவியாக்கத்திற்கு உட்படுவ தனைக் காணக்கூடியதாயிருக்கின்றது. இத்தகைய தன்மைகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்து நீர் வீணுக வீணடிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலநீர் சம்பந்தமாகச் சமீப காலங் களில் ஏற்பட்டுவருகின்ற இன்னெரு பிரச்சனை நீரில் கலந்துள்ள

படிப்பகம்

www.padippakam.com



நைதரசனின் அளவாகும். பயிர்ச்செய்கைப் பகுதிகளில் அளவுக்கு மிஞ்சிய யூரியா போன்ற வளமாக்கிகளின் மேலதிகப் பயன்பாட்டினுலும், அடர்த்தியாக மக்கள் வாழுகின்ற பாகங்களில் நீரடைப்பு மலசலகூடங்களிலிருந்து நிலநீரைச் சென்றடையும் மாசுக்களினுலும் நிலநீரில் ஏனைய மாசுக்களுடன் நைதரசனின் அளவு பெருமளவு அதிகரித்து வருகின்றது. வருங்காலத்தில் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு தோற்றப்பாடாக இது உருவவெடுக்கக்கூடும்.

எனவே சில குறித்த பாகங்களில் கிணறுகளிலிருந்து அளவுக்கு மிஞ்சிய நீரை இயந்திரங்கள்மூலம் வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்துதல் ஆவியாக்கத்தின் மூலம் வீணுகும் நீரைக் குறைத்தல், நீரில் நைதரசனின் கலப்பைக் குறைத்தல், வேறு பல வழிகளில் நீர் அசுத்தமடைவதைத் தடுத்தல், நகரப்பகுதிகளில் குழாய்மூலம் விநியோகிக்கப்படும் நன்னீர் குறித்த பயன்பாட்டுக்காகவல்லாது, வேறு தேவைகளின்மூலம் விரயமாக்கப்படுதல் என்பன யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளங்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி நடவடிக்கைகளாகும். இவை சம்பந்தமாகவும், இவற்றினுல் ஏற்படக்கூடிய தீங்குகளின் பலாபலன்களை மக்களுக்கு எடுத்துரைத்து இவற்றின் தீய விளைவுகள் தடுக்கப்படவேண்டும். வருடத்தில் மூன்று மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியினுல் நிலத்துக்கடியில் சென்றடையும் நீரை இயன்றவரையில் சிக்கனமாகவும், தேவைக்கேற்பவும் பகுத்தறிவுடனும் பயன்படுத்துவதன் மூலமே குடாநாட்டில் வருங்காலத்தில் மக்கள் வாழ்க்கையை சுபீட்சமுடையதாகப் பேண முடியும். குடாநாட்டின் உட்பகுதியில் இருக்கும் உவர் நீரேரிகளை யாழ்ப்பாணக் கடனீரேரியுடன் இணைத்து நன்னீரேரிகளாக்கும் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தினுல் குடாநாட்டின் நன்னீர்ச்சேமிப்பு அதிகரிக்க வழிவகை ஏற்படுவதுடன் வருடத்தில் சில மாதங்களுக்காவது இவ்வேரிகளையும் பல தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும். (தொடரும்)

ஒரு புரட்சிவாதியானவன் மக்களையும் அவர்கள் சார்ந்த பிரச்சனைகளை படிப்பதில் மாணவனுகவும், மக்களுக்கு போராட்டம் பற்றியப் சிந்தனைத் தெளிவினை ஏற்படுத்துவதில் ஆசிரியனுகவும், குறிக்கோளை நோக்கி வழிநடத்துவதில் வழிகாட்டியாகவும், தடங்கல்களை களைந்தெறிவதில் போராளியாகவும் அமைகின்ருன்.

படிப்பகம்

www.padippakam.com

# காதலிக்கு
# ஓர்
# தொடர் கடிதம்

சந்ததி இல்லா நாட்டின் சரித்திரம் அழியும் என்ற
சிந்தனை எனக்குமுண்டு ஆனால் அன்பே
கல்யாணமாயிலென்ன களந்தன்னில் பகைமுடிக்க
துப்பாக்கி கைகளிலே தூக்கும் வலுவிருந்தால்
எமைவெல்லச் சபதமிட்ட விவேகமில்லார் பகைமுடித்து
கொல்லுந் துயரையெல்லாம் வென்றுக வேண்டுமடி.
சந்ததி இல்லா நாட்டின் சரித்திரம் அழியுமென்றால்
சரித்திரமில்லா நாட்டில் சந்ததி வாழ்ந்துமென்ன?
உலகின் வரலாறு மாறுவது கண்ட பின்பும்
பழைய வரலாறே காவியமாய் தீட்டுதற்கு
உலவும் முதலாளி வர்க்கத்தார் தம் நினைவில்
குலமானம் குலவீரம் கோத்திரங்கள் சாத்திரங்கள்
எல்லாமே எப்போதும் நமக்கெதிராய் உள்ளது தான்
இந்த வல்லசுரர் வரலாறு வேண்டாம்; நமக்கெல்லாம்
ஒருலகு ஓரினம் ஒருவர்க்க மென்கின்ற
ஓர் நிலையே சரித்திரமாய் உலகிற்கு வேணுமடி
மானுடத்தின் தோற்றங்கள் மகிமைபெறுமங்கே தான்
அந்த வரலாற்றை படைத்திடவே நம் இளைஞர்
சிந்துகிறார் உதிரத்தை உண்மையின் நிறமதென்று
உலகினையே வெல்வதற்கு உறுதி மிகக்கொண்டார்.
வாழ்வதற்கன்றோ போர் இம்மண்ணில் இறப்பதற்காகவன்று
ஆதலால் கண்ணே நாம் வாழ்விற்காய் போராட
இப்போதே காலம் கனிந்து வருவதனால்
தப்பாது நாமெல்லாம் போராட வேண்டுமடி.
வீட்டை விட்டெங்கோ சென்று
விடுதலைப் போரில் நீங்கள் இணைந்திட்ட சேதி இந்தக்

படிப்பகம்

www.padippakam.com



காட்டிக் கொடுக்கும் கபோதிகளறிந்தால் போதும்.
நீட்டியே சொல்வாரப்பால் விரைந்திடும் அரச படைகள்
விடுவரோ என்னை இங்கு இழுத்தவர் ஏற்றி எங்கோ
சிறைகளில் அடைத்து வைத்து
கொச்சி மிளகாய் தன்னைக் கொழுத்தியே புகைபிடிப்பார்
குண்டூசி நகத்துள் ஏற்றிக் கேள்விகள் பலவும் கேட்பார்
துப்பாக்கி முனையில் கற்பை சூறையுமாடிக் கொல்வார்.
என்று நீ பொறித்த வார்த்தை மறக்கிலேன், கேள் இம்மண்ணில்
காட்டிக் கொடுப்போரெந்த நாட்டிலுமுண்டு ; ஆனால்
முடிவொன்று வரும்வரைதான் அவர்களின் பயணம். அப்பால்
கறை அவர்பெயரோடொட்டி காலத்தின் பழியை வாங்கும்;
விடுதலை வீரர் வாழ்வு தொடர்வதே அப்பால் தானே
ஆதலால் அதையும் நாங்கள்
தாங்கியே தொடரலாம் மண்ணில்
எட்டப்பர் கூட்டந்தன்னால் எதுவுமே நின்றதில்லை
கெட்டியாய் நாமிருந்தால் கேடுகள் தொலையுமட்டும்
மட்டிலாச் சோதனைத் தீ உட்புகுந்தெழவே செய்யும்.
சாதனை செய்வோர் யாரும் சோதனை மிக்க அந்த
வேதனை யாவும் நன்றாய் அடைத்திடாதெங்கும் அந்த
சாதனை செய்தாரென்று சரித்திரம் சொன்னதில்லை !
நீயும் வேதனைத் தீயில் வீழ்ந்து துடித்தெழுந்திருப்ப தெல்லாம்
சாதனை ஒளியை நாளை காண்பதற்காகு மன்பே
தேர்தலில் நிற்போர் கூடித்தாம் விடும் அறிக்கை தன்னால்
மேடையிலே எழும் பீரங்கிச் சவால்கள் தம்மால்
மண்ணிலே மாந்தர்க்கென்று விடுதலை கிடைப்பதில்லை.
தியாகங்கள் தமக்கஞ்சாத வியாபகமான போரே
விடுதலை தன்னைத் தந்து துயரெலாம் விடுவித்தோங்கும்
அந்த நாள் தூரமில்லை அச்சத்தைத் தவிர்ப்பாய்; ஞாலம்
மாறியே தீரும். நாளை மாறிடும் உலகே துயரை ஓட்டும்
அன்பே ! ஒன்றுனக்கு நினைவுண்டோ
அன்றொருநாள் எனைப்பார்த்து
கல்லூரி நாளிற்கண்ட களைமுகம் இதுவே யல்ல
கொலுவெலாம் இழந்த கோலம்
கொண்டதேன் அத்தான் என்று
வேதனை கொண்டு கேட்டாய்
ஏதேதோ சொல்லி உன்னை ஏமாற்ற எண்ணுதந்தப்
பட்டினக்காட்சியொன்றை சுட்டி நான் நின்று சொன்ன
கவிதையை மறந்தா போனாய்-கண்ணே
வீதியில் தூங்கி விடிவதன் முன் விழித்து

www.padippakam.com



பாதி வயிற்றிற்காய் படியேறிப் பலரை இரக்கும்
நாதியிலாது வாழும் நடைபாதை வாசிகள்
யாரும் நினைக்காத காலத்தில் வாழ்வதனால்
வேற்றுமைகள் இல்லாத ஏற்றமிகு சமூகமொன்றை
இங்கு படைப்பதற்கு புறப்பட்ட தோழரோடு
நானும் இணைந்து விட்ட காலத்தின் கோலமிது
எல்லோர்க்கும் எல்லாமும் ஏற்றவழி காணுதற்கு
நல்லதொரு சந்தர்ப்பம் தந்தவற்கு நன்றி சொல்வோம்.
வல்லவர்கள் எல்லோரும் ஒன்றாய் திரண்டெழினும்
இல்லார்தம் தியாகங்கள் இடுப்புடைத்து வென்றுவிடும்.
கால்பதித்து நாம் படைக்கும் சமதர்ம நாட்டினிலே
நாளைய நம் வாரிசுகள் நடைபோடும்.
இன்றே நாம் கண்டு கொள்ள வாய்த்த தருணமிதை
வென்றெடுக்க வேண்டுமடி வேதனைகள் தமை விடுத்து
சாதனைகள் செய்துவிட்டுச் சரித்திரத்தைப் படையுமென
போதனையை நீ செய்து புதுப்பரணி பாடாமல்
வேதனையைக் கொட்டி எனை வீட்டிற்கழைப்பதிலே
நீதி இருப்பதென்று எனக்குப் புரியவில்லை
காலத்தை வென்றெடுத்த கண்மணியாய் ஞாலத்தின்
கோலத்திருவிளக்காய் குலமகளே நீ திகழ்ந்து
ஞாலத்து மக்களுக்கே வழிகாட்ட வேண்டுமடி
இல்லார் தம் எண்ணமது ஈடேறும் மார்க்கமதை
வென்றாக வேண்டுமெனில் மேதினியில் நீவிரெலாம்
வீணாகவே எழுந்து நமது பகைமைதன்னை
நாமே தான் ஒழித்திடவும், வென்றாகவும் வேண்டும்
இங்கிருந்து பகை முடிக்க எண்ணாது சென்றெங்கோ
காடுமலைகளிலே மறைந்திருத்தல் ஏனென்று
கோடிட்டு நீ வரைந்தவரிகள் எனைப்பார்த்து
வேட்டுச்சிரிப்பொலியாய் வேதனைதான் செய்ததடி
வீட்டில் உனக்கருகே உன்னோடு தானில்லை-ஆனாலும்
நாட்டில் தான் நானிருக்கேன் சத்தியமாய் எனை நம்பு
பக்கத்திருந்துன்னைப் பார்க்காதிருந்தாலும் என் விழிகள்
உனைச்சுற்றியே இருக்கும் உண்மைதனை உணராய்
இந்நாடுதனை விட்டு நாமெங்கும் செல்லவில்லை
முன்னாளின் மன்னவர் போல் அஞ்ஞாதவாசமதை
இன்னாளில் செய்வதெல்லாம் போராளர் மட்டும்தான்
இந்நாட்டை ஆள்வோரால் ''பயங்கரவாதம்'' எனும்
திருநாமம் சூட்டியதால் விடுதலை வீரரெல்லாம்
பயங்கரவாதியென்ற பட்டத்துள் வாழ்கின்றார்.

www.padippakam.com



எட்டப்பன் பணியாற்றி எவருமிந்த வாதிகளை.
காட்டிக்கொடுப்பதற்கு லட்சங்கள் பரிசென்று
நீட்டி முழக்குகின்ற நீசமதி அரசினர்க்கு
ஓட்டுக்காயுதிரமிதை இழக்காத தீரரென்றும்
பாட்டுக்காய் புரட்சியினைப் பாடாத வீரரென்றும்
சீட்டுக்கணக்கில் சொல்வதற்கு ஆளிருந்தும்
பட்டாளச் சிப்பாய்கள் படைபலங்களாயிருந்தும்
கூட்டாட்சி முதலாளி ஏகாதிபத்தியங்கள்
எல்லாமே எதிரெதிராய் எதிர்த்திட்ட வேளையிலும்
ஏழைத் தொழிலாளர் பாட்டாளி விவசாயி மக்களெல்லாம்
வல்லாண்மை தனைக்குவித்து வரலாற்றை வென்றெடுப்பர்
விடிவெள்ளி காண்பதற்கு விரைந்திட்ட தோழரெல்லாம்
முடிவொன்று வைப்பார்கள் ; மிக விரைவில் அதுவரையில்
கடிதென்று எண்ணாது காத்திருப்பாய் கண்மணியே.

**எமக்கென்று நாடுதனை மீட்கும் வரை விடை**
**பெற்றுக் கொள்ளும் உண்ணுயிர்..........**

## *மாணவர்களின் கவனத்திற்கு*

ஈழவர்களின் தேசிய விடுதலைப் போராட்டமானது கூர்மையடைந்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே அரசியல் தெளிவினை ஏற்படுத்துமுகமாக முழுக்க முழுக்க மாணவர்களிடமிருந்து வரும் விவாதங்கள், ஆய்வுகள், ஆக்கங்களை 'நாங்கள்' தரங்கி வருகின்றது. அந்த அடிப்படையில் கடந்த இதழ்களில் பிரசுரமாகிய ''மழலையர் மனங்களில் மறைந்து கிடப்பவை'' என்ற தலைப்பிலான ஆய்வு கட்டுரைகள் வாசகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. இதே அடிப்படையில் **இன்றைய போராட்ட முன்னெடுப்புக்கு அத்தியாவசியமானது அரசியல் முதிர்ச்சியா? ஆயுதங்களா?** என்ற தலைப்பிலான விவாத மேடைகளை பாடசாலைகளில் ஏற்படுத்தி அது சம்பந்தமான ஆய்வுகளின் பிரதிகளை 'நாங்கள்' வந்த வழியிலேயோ அல்லது தெரிந்த GUYS அங்கத்தினர் மூலமாகவோ எமக்கு அனுப்பி வைத்தால் அவற்றை தொடர்ந்துவரும் இதழ்களில் பிரசுரிக்கக் கூடியதாக இருக்கும்.

www.padippakam.com



## குயிலின் கூடுகளில் காகத்தின் குஞ்சுகள்

இயற்கைக்கே மாருன
தலைப்பிது என்றாலும்
இயல்பாய் போனதிது.

சுதந்திர கீதமிசைக்கப்
புறப்பட்ட
குயிலின் கூடுகளில்
சமூக விரோதக் காகங்கள்
சில கள்ளத்தனமாய்
முட்டையிட்டதனுல்
பூபாளத்திற்குப் பதில்
முகாரிகளே முழங்குகிறது.

அநியாயம் முகத்திலறைய
அடுத்த கன்னம் காட்ட
யேசுபிரான்களா நாங்கள் ?

கள்ளத்தனமாய் புகுந்த
காக்கைக் கூட்டங்களை

குத்திக் காட்டியே
குட்டிக் கலைத்து
குடியைக் காக்க
குடிமக்கள் கரங்களோடு
கூட்டுச் சேரு !

□

## தர்மம் நிர்வாணமாகிறது

மனித உயிர்கள்
பௌத்த தர்மத்திற்கு
அர்ப்பணம் செய்யப்படும்....

கொலையும் கொள்ளையும்
அரசாங்கப் படையினரால்
தேசீய விளையாட்டாக
பிரகடனப் படுத்தப்பட்டு விட்டன...

கற்பழிப்பும்—சித்திரவதையும்
தேசியப் பண்பாகி விட்டது...

தார் மீகம்
இங்கு
ஜார்மீக மாகிக்
கொண்டிருக்கின்றது...

நீதிபதிகள்
ஸ்தானத்தில்
குற்றவாளிகளே
கொலுவிருக்கிருர்கள்....

நீதியும்—தர்மமும்
மஞ்சள் அங்கிகளால்
மறைக்கப்பட்டு
வெகுகாலமாகி விட்டது....

புத்த பகவான் மீண்டும்
பரிநிர்வாணம் வேண்டி
அரச மரத்தடியில்
நிஷ்டையில் அமர்வார்.

□

படிப்பகம்

எங்கள் சூழலில் எத்தனையோ சம்பவங்கள்; பிரச்சனைகள்; ஆனாலும் பழமையில் ஊறி சம்பிரதாய சடங்குகளில் விடாப் பிடியான பற்றுதலைக் காட்டி சமூகத்தின் போலியான வாழ் வையே காப்பாற்றத் துடிக்கும் அப்பாவியான தாய்மார்கள். இன்னும் இவர்கள் தங்கள் கருத்துக்களை மாற்ருமல் இருப்பது விடுதலைப் போராட்டத்தின் ஒரு பாதகமான அம்சம். இனி மேலாவது, இவர்கள் சுயநல சிந்தனையை விட்டு வெளியேறி யாக வேண்டும்.

# இன்னும் இவர்கள்...!

பூஸாவில் இளைஞர்கள் பூட்டா னில் பேச்சு வார்த்தையா?... பேச்சு வார்த்தை-வேண்டாம்...., போர் நிறுத்தம்-வேண்டாம்...., மாகாண சுயாட்சி-வேண்டாம்..., ஈழமொன் றே-எமது இலட்சியம்...! போராளி களே-ஏமாருதீர்கள்.., ஆயுதத்தை கீழே போடாதீர்கள்..., இதுவரை சிந்திய இரத்தம் போர் நிறுத்தத்திற் காகவா...? இறுதி முடிவு-ஈழம் ஒன்றுதான்....'' இன்னும் பல கோஷங்கள் வானையே அதிர வைக் கும் வண்ணம் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது.

ராணி ரியூஷன் முடிந்து வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக இந்த ஊர்வலத்தைச் சந்திக்க நேர்ந்தது. அவளுடன் வகுப்பில் படிக்கும் தோழி கள்-இன்று நடைபெறப் போகும் எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொள்ள வரும்படி அழைத்தனர். அவளுக்கும் விருப்பந்தான். ஆனால்... வீட்டை நினைத்தால்தான் பயம். ரியூஷன் முடிந்து சிறிது தாமதமாக வந்தால் போதும். அம்மா கேட்கும் கேள்விகளும் குறுக்கு விசாரணையும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின கீழ் கைது செய்யப்படும் அப்பாவி களை ஞாபக மூட்டும்.

சுன்னுகச் சந்தியைக் கடந்து இப் போது ராணிக்கு அண்மையில் ஊர் வலம் மெதுவாக வந்து கொண்டி ருந்தது. ஊர்வலத்திற்கு வழி விடுவது போன்று ராணியும் ஒதுங்கி நின்ருள். அவளைப் போன்றே வேடிக்கை பார்க் கும் கூட்டம் பாதையின் இருமருங் கிலும் கூடி நின்றது. ஊர்வலத்தினர் அவர்களைச் நோக்கிச் சுட்டிக்காட்டி ''பார்வையாளர் வேண்டாம்...''

''பங்காளிகளே வேண்டும்..'' என்று கோஷமிட்டுக் கொண்டு சென்றனர்.

இதைக் கேட்க ராணிக்கு அவமானமாக இருந்தது. அவளைப் போன்ற பாடசாலை மாணவிகள் அதிகம் கண்ணில் தென்பட்டனர். இந்தச் சைக்கிளை இப்போது என்ன செய்வது? என்ற பிரச்சனையே பெரும் பிரச்சனையாக இருந்தது. ஏன்? இப்படிச் செய்தால் என்ன..? இதில் இருக்கின்ற கடைகளில் ஒன்றில் விட்டு விட்டு பிறகு வந்து எடுத்தால் என்ன..? அவள் புத்தி வேகமாகச் செயற்பட்டது. மறுவினடி...அவளும் ஊர்வலத்தில் இணைந்தாள். இப்போது மனதில் ஒரு வித நிம்மதி உணர்வு பிறந்தது. நான் ஓர் பார்வையாளனாக நிற்காது எனது பங்களிப்பை நல்குகிறேன் என்ற எண்ணம் திருப்தியைத்தந்தது.

கொதிக்கின்ற வெய்யிலையோ அல்லது பசியையோ யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. கத்திக் கத்தி வறண்டு போன நாவை நனைப்பதற்கு பாதையில் வைத்து மக்கள் கொடுத்த குளிர்பானங்கள் உதவி புரிந்தன. குறித்த இடத்தை ஊர்வலம் வந்தடைந்த போது 5½ மணியாகி விட்டது. ஊர்வலம் மெல்ல மெல்ல கலையத் தொடங்கிய போது தான் ராணிக்கு வீட்டு எண்ணம் எழுந்தது. வீட்டில் என்ன நடக்குமோ என்ற நினைப்பே பயத்தைக் கொடுத்தது. அப்பா சவூதியில் என்பதால் அவரைப் பற்றிப் பிரச்சனையில்லை, ஆனால்...இந்த அம்மாவை சமாளிப்பதுதான் பெரும் பிரச்சனையாக இருக்கின்றதே என்று அலுத்துக் கொண்டாள்.

''அது சரியடி ராணி—நேற்று ஊர்வலத்துக்கு வரமாட்டனெண்டனி—பிறகு எப்பிடி மனம் மாறி வந்தனியடி...'' மனோ கேட்டாள்.

''ஊர்வலத்தை பார்த்த பின் ஏற்பட்ட திடீர் முடிவுதானடி இது. அதாலை தான் இப்ப பயப்படுகிறன்...!''

''அப்ப நீ வீட்டை சொல்லிப் போட்டு வரவில்லையே....? விஜி'' ஆச்சரியத்தோடு கேட்டாள்.

''இண்டைக்கு வீட்டில் ஒரு தாக்குதலை எதிர்நோக்க வேண்டி வரப் போகுது... என்ன....?'' பிரேமா நக்கலடித்தாள்.

''நான் படும் பாடு தெரியாது. உங்களுக்கு சிரிப்பாய் இருக்குது என்ன...'' தோழிகளை கடிந்து கொள்வது போல் சொன்னாள் ராணி.

''வாழும் வரை போராடு....'' விஜி பாட்டு படிக்கத் தொடங்கினாள், அவர்கள் எல்லோரும் பிரிந்து சென்றனர்.

வீட்டுக் கேற்றை திறக்கும் போதே-ராணிக்குத் தயக்கமாக இருந்தது.

''எங்கை இவ்வளவு நேரம் போட்டு வருய்...'' அம்மாவின் கத்தல்.

''என்ன..? நான் எங்கை போயிருப்பன் என்று உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா அம்மா...?'' என்பது போல் தாயைப் பார்த்தாள்.

''என்ன பேசாமல் நிற்கிருய்—கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்லடி...'' அம்மா மீண்டும் ஆத்திரத்தில் கத்தினாள்.

''ஊர்வலத்திற்கு போ...ன....ஞ....ன்...'' தயங்கியபடி இழுத்தாள்.

''அப்ப சொல்லிப்போட்டே போனனீ... இல்லைக் கேட்கிறன் சொல்லிப்போட்டே போனனீ.. இவன் குமார் வந்து சொல்லாது போனால் உன்னைக் காணாமல் நாங்கள் எங்கை தேடுறது. நீ ஒரு குமரி. இப்படி, சொல்லாமல் கொள்ளாமல் போனால் உன்னைக் காணேலை யெண்டு நாங்கள் தேடித்திரிந்தால் ஊர் உலகம் என்னடி சொல்லும் சொல்லடி'' அம்மா அடிப்பதற்குக் கையை ஓங்கிக் கொண்டு வந்தாள்.

''நான் சொல்லாமற் போனது பிழைதான்,ஆனால் போகப்போறன் என்று சொன்னால் மட்டும் நீங்கள் போக விடுவியலோ?'' சற்று தைரியமாக கேட்டாள் ராணி. ஒரு ஊர்வலம் தன் மனதில் ஒரு மாற்றத்தை... துணிவை கொடுத்திருப்பதை எண்ணி வியந்தாள்.

''போக விடுகிறதோ...? கேட்டிருந்தால் பல்லுக் கொட்டியிருப்பன் ஓ! பொடியள் முடிஞ்சு இனி குமரியள் ஈழம் காணப்போயினம். ஈழப் போராட்டமெண்டு சொல்லி இவங்கள் ஒவ்வொண்டைச் செய்து என்னத்தைக் கண்டாங்கள், எங்கடை தமிழ்ச்சனம் வீணாய் அழிஞ்சது தான் மிச்சம். இப்ப என்னடாவெண்டால் பேச்சு வார்த்தைக்குப் போயிருக்கினம்...'' அம்மா எரிச்சலோடு சொன்னாள்.

அம்மாவின் அறியாமையை நினைக்க அவளுக்கு வேதனையாக இருந்தது. அம்மாவிற்கு ஒரு நாளைக்கு இதைப்பற்றி தெளிவாக விளங்க வைக்க வேணுமென்று ராணி எண்ணிக் கொண்டாள்.

''உந்த ஊர்வலம் அது இது வெண்டு நடத்தினாற் போல் அரசாங்கத்திற்கு என்ன ? அவங்கள் தாங்கள் செய்யிறதை செய்யாமல் விட்டிடுவாங்களோ? அந்தக் காலத்தில் தொடக்கம் சத்தியாக்கிரகம்.... உண்ணாவிரதம் ஊர்வலம் செய்தவைதானே? என்னத்தைக் கண்டவை...?'' சற்று கோபம் தணிந்தவளாக அம்மா கேட்டாள்.

''அந்த ஊர்வலத்திற்கும் இந்த ஊர்வலத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கம்மா. அப்போது அரசாங்கம் செய்வதை எதிர்த்தம் ஆனால்... இப்ப பேரினவாத ஸ்ரீலங்கா அரசோடு பேச்சு வார்த்தைக்கு போக வேண்டாமென இயக்கங்களைக் கண்டித்தம். பயங்கரவாதிகள் தான் ஈழம் கேட்கினம் மக்கள் எதிர்க்கிறார்கள் என்று சொல்லுகின்ற அரசாங்கத்துக்கு-இயக்கங்கள் உங்களுடன் பேசுவதையே மக்கள் எதிர்க்கிறார்கள்-ஈழம் ஒன்றைத்தான் மக்களெல்லோரும் விரும்புகிறார்கள் என்பதைக் காட்டத்தான் இந்த ஊர்வலம்.. '' என்று சொல்லி முடிக்கும் முன்னமே

''நீ கதைக்கிறதைப் பார்த்தால் -நீயும் இந்த இயக்கங்கள் நடத்துற கூட்டங்களுக்கு போறாய் போல இருக்கு. அதுதான் இப்பிடிக் கதைக்கிறாய் ஓ! சொல்லிப் போட்டன். நாங்கள் மானம் மரியாதையோட வாழுற குடும்பம். நீ அங்கை....இங்கையெண்டு போய் எங்கடை மானத்தை கப்பலேத்திப் போடாதை...'' கண்டிப்போடு சொன்னாள் அம்மா.

ஒரு ஊர்வலத்திற்கு போனதால் -ஏதோ செய்யக் கூடாததைச் செய்து விட்டதாக-குடும்ப மானமே போய் விட்டதாக நினைக்கிற தாயை நினைக்க ஆத்திரம் வந்தது ராணிக்கு.

''இப்ப என்னத்துக்கு கத்தறியள்-ஏதோ மினி சினிமாவுக்கு போய் ஃபுளு பிலிம் (Blue Film) பார்த்திட்டு வந்தது போலையல்லே நினைக்கிறியள்...'' மனதில் எழுந்த சினம் வார்த்தையாக வெளிவந்தது.

www.padippakam.com



''என்னடி சொன்னனினீ ....?'' அம்மா ஆத்திரத்தில் அவள் கன்னத்தில் மாறி மாறி அறைந்தாள். ஓ! இது தான் முதலும் கடைசியுமென நினைத்துக் கொள். இனிமேல் இப் பிடித் திறிஞ்சு போட்டு வந்தியோ கால் தட்டி முறிச்சுப் போடுவன்...'' என்று சொல்லியபடி அறையை விட்டு வெளியே சென்றாள்.

அன்று இரவு சாப்பிட அவளால் முடியவில்லை. அக்காவோ, தங்கையோ தன்னோடு வந்து கதைக்காதது அவளுக்கு பெரிய வியப்பாக இருந்தது. அம்மா அடித்ததை விட சகோதரிகள் கதைக்காததை விட-அம்மா இயக்கங்கள் பற்றியும் அதில் பெண்கள் ஈடுபடுவதைப் பற்றியும் தவறாக புரிந்து கொண்டு கதைத்தது மனதிற்கு வேதனையைத் தந்தது.

''நீ முதலில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் உனது வீட்டில் இருந்து தான் வரும்'' 'லங்கா ராணி' புத்தகத்தில் வேட்டிக்கார இளைஞன் கூறிய வார்த்தைகள் அவள் மனதில் நிழலாடியது. வாக்கியங்கள் தொடர்ந்து நெஞ்சுக் கூட்டினுள் தாளமிடத் தொடங்கியது.

ஒரு பெண் இயக்கத்தில் சேர்ந்தால் குடும்பமானமே போய் விடுவதாக நினைக்கின்ற அம்மாக்களும் விடுதலை இயக்கங்களில் சேர்கின்ற பெண்களை வேறு கோணத்தில் பார்க்கின்ற சமூகத்தையும் நினைக்க வெறுப்பாக இருந்தது. இவ்வளவு பிரச்சனைகளை எதிர் நோக்கியும் இன்னமும் மாருமல்-தம்மைப்பற்றியும் தமது குடும்ப கௌரவம் பற்றியும் பிதற்றிக்கொண்டு திரிபவர்களை எண்ணி வேதனைப்பட்டாள்.

எமது போராட்டத்தைப் பற்றி இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளாத-அம்மாவைப் போன்று இன்னும் நிறையப் பேர் இருப்பதாலும்-எல்லோரும் ஓர் பார்வையாளராக நிற்பதாலும் தான் எமது ஈழப் போராட்டம் பின் தங்கிப் போகிறது என்று அவளுக்கு விளங்கியது. இவர்கள் எவ்வளவு விரைவில் மாறுகின்ருர்களோ-அவ்வளவு சீக்கிரத்தில் ஈழம் மலரும் என எண்ணிக் கொண்டாள்.

ஒரு புதிய கருத்தை மக்களுக்கு சொல்லும் போது முதலில் எதிர்ப்பு வருவது இயற்கை. எதிர்ப்புக் கிளம்பும் என்பதற்காக எமது கருத்தை தெரிவிக்காது இருக்க முடியாது. அது போலத்தான் இதுவும். மற்றவர்கள் சொல்கின்ருர்கள் என்பதற்காக நாம் பயந்து கொண்டு வீட்டில் இருக்கக் கூடாது.

போராட்டம் பற்றியும் அதில் பெண்களின் பங்களிப்பைப் பற்றியும் எடுத்துரைத்து இவர்களை எப்படியும் பங்காளிகளாக மாற்ற வேண்டும். இவர்களை மாற்றுவதாஞல் என் போன்ற பெண்கள் துணிந்து செயல்பட வேண்டும். ஒரு தெளிவான முடிவு அவள் மனதிலே உதயமானது. □

---

## கல்லறைகள் அத்திவாரமாகின்றன

ஓலைக்குடிலில் எரியும் விளக்குகள்
மாலைப்பொழுதினில் எரியவில்லை.
வீறிடும் குழந்தை கேட்கிறது
வேலைக்குப் போன அப்பா எங்கே
ஏன் நாம் அனைவருமே கேட்கிறோம்.
எங்கள் அண்ணன்மார்கள் பலர்
எங்கே
கல்லறைகள் நிறைகின்றன !
அத்திவாரக்கல்லாகின்றன ! !
□

படிப்பகம்

*கொங்கோங் நகரில் நடைபெற்ற ஆசிய மாணவர் கழகத்தின் (ASA) மகாநாட்டில் கலந்து கொண்ட சர்வதேச மாணவப் பிரதிநிதிகளால் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கண்டன கடிதத்தின் தமிழாக்கம்.*

# எத்தனை காலம்?

யூலியஸ் றிச்சார்ட் ஜயவர்த்தன,
ஜனாதிபதி அலுவலகம்,
பொதுச்சதுக்கம்,
கொழும்பு-1.
ஸ்ரீலங்கா.

ஆய்வரங்கு

தமிழ் மக்களுடைய
வாழ்க்கையும், தாகங்களும்.

ஜனாதிபதி அவர்களே,

கொங்கோங்கில் இன்று நடைப்பெற்ற மேற்படி ஆய்வரங்கில் பங்குபற்றிய நாங்கள், ஸ்ரீ லங்காவில் இன்று பெருந்தொகையாகத் தமிழ் மக்கள் கொல்லப்படுவதையிட்டு சர்வதேச ரீதியாக நடைபெறும் கண்டனங்களுடன் எமது கண்டனங்களையும் சேர்த்துக் கொள்கிறோம்.

நாங்கள் பார்த்த வீடியோ படங்களிலிருந்தும் புகைப்படங்களிலிருந்தும் ஒரு உண்மை தெளிவாகியது. சமூக நீதியையும் சுதந்திரத்தையும் நாடும் தமிழ் மக்களுக்கு ஸ்ரீலங்கா ஒரு சொர்க்கமல்ல, நரகமே! மாணவ இளைஞர் பொதுமன்றத்தின் (GUYS) பேச்சாளர் ஒருவரும், கொங்கோங்குக்கு வருகை தந்திருந்த ஒரு தமிழ்ப்பேராசிரியரும் உங்கள் நாட்டின் யதார்த்த நிலைபற்றி தெளிவாக எடுத்துக் கூறினார்கள். தமிழ்மக்களுக்கெதிராக உங்கள் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்படும் கொடூரங்களை அறியும் போது நாம் மிகுந்த அதிர்ச்சியும் கோபமும் அடைகிறோம். எவருமே இதிலிருந்து தப்பவில்லை. ஆயுதப் படையினரின் நடவடிக்

www.padippakam.com



கைகளின்போது ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டு, சிறைக்கூடங்களில் தள்ளப்பட்டு, பலாத்காரமாகத் துன்புறுத்தப்பட்டு விசாரணை செய் யப்பட்டனர். தங்கள் கிராமங்களை விட்டு மக்களை வெளியேற்றும் வகையில் வீடுகள் எரிக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே அவர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

நாங்கள் உங்கள் நாட்டிற்கு இதுவரை வருகைதராத போதி லும் நாங்கள் கேள்விப்படுபவை யாவும் எமக்குப் போதுமான தர வுகளாக உள்ளன. நாங்கள் ஈடுபாடு கொள்ளவும் தமிழ்மக்களைப் பாதுகாப்பதற்காக எழுச்சி கொள்ளவும் இக்கருத்தரங்கு எமக்கு ஒரு சந்தர்ப்பத்தை தந்துள்ளது.

மனித வாழ்வின் பெறுமானங்களையும் மாண்புகளையும் இனம் கண்டு கொள்பவர்கள் என்ற வகையில், நீதியான இந்தத் தாகங் களுக்கு எமது பூரண ஆதரவும் அவர்களுடன் ஒருமித்த தன்மை யும் உரியதாகும். சுயநிர்ணயத்திற்கான அவர்களுடைய தொடர்ச் சியான போராட்டத்திற்கு எமது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்ப்பிரதேசங்களில் ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளை வாபஸ் பெறும்படியும், தமிழ்மக்களுடைய மண்ணை ஆக்கிரமிப்புச் செய்வதை நிறுத்தும்படியும் உங்கள் அரசை நாம் கேட்டுக் கொள் கிறோம். தமிழ்மக்களுடைய ஜனநாயக உரிமைகளை மீறச்செய்யும் பயங்கரவாதத் தடைச்சட்டம் (1979) அவசரகால நிலைமை 15A, இவற்றுடன் ஏனைய தடைச்சட்டங்களையும் நீக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். எவ்வித நிபந்தனைகளுமின்றி சகல அரசியற் கைதி களையும் உடனடியாக விடுதலை செய்யும்படி மனுச்செய்கிறோம். மனித உரிமைகளை மதித்து தமிழ் மக்களுடைய உரிமைகளை மேலும் நசுக்காமலிருக்கும்படி உங்கள் அரசைக் கேட்கிறோம்.

இறுதியாக, தமிழ் மக்களை பாதுகாக்கும் வகையில் தங்கள் பலத்தை ஒன்று திரட்டும்படி நீதியையும் சமாதானத்தையும் விரும் பும் சகல மக்களையும் கேட்டுக்கொள்கிறோம். விழிப்படைந்த சகல சிங்கள மக்களையும், தமிழ் மக்களுக்கு ஆதரவு கொடுக்கும்படி அழைக்கிறோம், தமிழ் மக்களின் போராட்டத்திற்கான ஒருமித்த ஆதரவு தமிழ்ப்பிரதேசங்களிலும் வெளிநாடுகளிலும் மட்டுமல்ல, சிங்கள சமூகங்களுக்கிடையேயும் உள்ளது என்பதை விரைவில் அறி யும்போது நாம் மிகவும் மகிழ்ச்சியடைவோம்.

எங்கள் உரிமைகளுக்காக எழுந்து போராடுவோம்!

படிப்பகம்

www.padippakam.com



## *பிலிப்பினோ மாணவ அணி* (LFS) *மீதான அடக்குமுறைக் கெதிரான* GUYS *ன் குரல்.*

ஜனாதிபதி பேர்டினண்ட் மார்க்கொஸ்,
மலாக்கானங் மாளிகை,
மெற்றோ மணிலா
பிலிப்பைன்ஸ்.

ஜனாதிபதி அவர்களே!

□ மாணவ இளைஞர் பொதுமன்றத்தினராகிய நாம் யூலை 4-ம் திகதி ரொறிஸ் டவோ நகரிலுள்ள கினோ கடற்கரை விடுதியில் பலமான ஆயுதம் தாங்கிய 439 வது P.C. கொம்பனியைச் சேர்ந்த பிரிவுகளால் கைது செய்யப்பட்டுள்ள 21 மாணவர்களையிட்டு மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்.

பிலிப்பைன்ஸிலுள்ள சகல ஜனநாயக மாணவஇயக்கங்களுக்கு எதிராக, அவர்களுடைய சுதந்திரத்திற்கும் உரிமைக்குமான சட்டப்பூர்வமான போராட்டங்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் இணைந்து ஒடுக்கும் உங்கள் ஆட்சியின் கொடுமைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சட்டத்திற்கு முரண்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டு, உறவினரையோ அணுகமுடியாமல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள எமது சகோதர சகோதரிகளை உடனடியாக விடுதலை செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பிலிப்பைன்ஸில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் மீளப் பெறுவதற்கான மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும்-பிலிப்பினோ மாணவ கூட்டணியின் சட்டப்பூர்வமான சகல செயற்பாடுகளுக்கும் எமது ஒருமித்த ஆதரவை இதனால் தெரியப்படுத்துகிறோம்.

பிலிப்பினோ மாணவ அணியுடன்
இணைந்து நிற்கும்
செயலாளர் (GUYS)

பிரதிகள் :

1. ஆசிய மாணவர் கழகம் (கொங்கோங்)
2. பல்கலைக்கழக மாணவர் கழகம் (நியூஸிலாந்து)

படிப்பகம்

www.padippakam.com



# அகதிமுகாம் வாழ்க்கையிலே...

''கஷ்டத்தின் மத்தியிலும்
கவலையை மறந்திருந்த
எம்மினம்
கால் ருத்தல்
பாணுக்காக
கால்கடுக்க
கியூவில் நிற்கும்
எம் சிறுர்கள்,
கால்வயிறும்
நிரம்பாமல்
''அம்மா இன்னும்
வேணும்'' என்றே
அடம்பிடிக்கும்
சிறுவனைத்தேற்ற
வழியறியா அன்னை
விழிநீரைச்
சிந்தவில்லை
தர்மிஸ்டரின்
தம் இஷ்ட ஆட்சியினுல்
மூன்று மாதத்தின்
முன்பு இழந்த
வீட்டை
முன்னூறு ஆண்டின்
முன்பு இழந்த
நாட்டை
மூன்றே நாள்
முன்பு இழந்த
கணவனை
எண்ணி எண்ணி
கண்ணீரெல்லாம்
வற்றிப்போயிற்று''
விடியலுக்காக
ஓர்
மைந்தன் புறப்படுகின்ருன்
அவ்வேளை
உண்டியல் நிரப்ப
விமானத்தில் ஏறி
ஒருவன்
பறக்கின்ருன்....
ஆம் ..
விடியலுக்காக
பிறந்தவர்கள்
காட்டிலும், மேட்டிலும்
உறங்குகின்றனர்.
ஆனல்-
உண்டியல் நிரப்ப
பறந்தவர்கள்
கட்டிலிலும் மெத்தையிலும்
சயனம்.
விடியல் தேடுபவன்
இதயத்தில்
எங்கள் உடைமை
எங்கள் சுதந்திரம்
எங்கள் நாடு,
என்ற
சிந்தனை.
ஆனல்
அவன் மனதில்
உல்லாசம், உழைப்பு
உயிர் பிழைப்பு
என்ற ஆசை
சிந்தித்தால்...

□

www.padippakam.com



மழலையர் மனங்களில் மறைந்து கிடக்கும் கருத்துக்களை அறிய 'நாங்கள்' அவாக் கொண்டதன் விளைவாக ஆரம்பிக்கப்பட்டது இப்பகுதி. விடுதலைப் போராட்டத்தைப் பற்றி என்ன கருதுகின்றீர்கள்? ஈழம் தேவையானது தானு? பேச்சு வார்த்தைகள் எங்களுக்கு ஒரு நல்ல முடிவைத் தருமா? என்பன போன்ற கருத்துக்களை ஒட்டி 9ம் 10ம் தரத்தைச் சார்ந்த மாணவர்கள் சிலரின் அபிப்பிராயங்கள் இங்கு தரப்படுகின்றன.

# மழலையர் மனங்களில் மறைந்து கிடப்பவைகள்

## விடுதலைப் போராட்டத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

விடுதலைப் போராட்டம் எமக்குத் தேவைதான். ஏனெனில் நாம் எமது அடிப்படைத் தேவைகள் பலவற்றில் பாதிக்கப்படுகின்றோம். தரப்படுத்தல், திட்டமிட்ட இனக்கலவரம், திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் போன்றவற்றால் ஈழமக்களாகிய நாம் பாதிக்கப்படுகின்றோம். இதற்கு ஒரு தீர்வைக் காண்பதற்காக விடுதலைப் போராட்டம் வேண்டும் என நினைக்கிறேன்.

இதற்கு ஒரு நல்ல தீர்வைக் காண்பதற்கு எமக்கு ஈழம் தேவை. பேச்சுவார்த்தைகள்மூலம் எங்களுக்கு ஒரு முடிவுகிடைக்கும் என்பதை நாம் நம்ப முடியாது. ஏன் பேச்சு வார்த்தை மூலம் எமக்கு ஈழம் கிடைக்கும் என்று நினைக்கவே முடியாது. பேச்சு வார்த்தை பேச்சுவார்த்தை என்று அநியாயமாக காலத்தையும் நேரத்தையும் கடத்துவதுதான் மிச்சம். பேச்சுவார்த்தையை நம்பிக்கொண்டு இராமல் ஒரு போராட்டத்தை

www.padippakam.com



நடத்தி இதற்கு ஒரு தீர்வை காண் பதையே நான் விரும்புகிறேன்.

## ஏன் ஈழம் கோருகிறோம்

இதற்கு அடிப்படையில் பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால் இதற்கு மூலகாரணம் பொருளா தாரம். ஒரு குடும்பத்தை எடுத்தால் பொருளாதாரக் குறைவால் தான் கூடுதலான குடும்பங்களில் சண்டை ஏற்படுகிறது. அதேபோல் எமக்கும் இது மூலகாரணமாக அமைந்துள் ளது. கல்வி, வேலைவாய்ப்பு போன்ற சிலவற்றில் நாம் பொதுமக்களிடை யே வேற்றுமை இல்லாமல் சமமாக நடக்கலாம். ஆனால் சாதி, பணம் போன்ற வித்தியாசத்தால் நாம் ஈழம் கோரினால் பல பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

## பேச்சுவார்த்தையால் பயன் கிட்டுமா?

கதைகேட்டுக் கேட்டு வளர்ந்தது நம் சமுதாயம். பேசிப் பேசி பொன் னன நாளை கடத்தின நம் கட்சிகள். தமிழர்கள் இன்று நாடு இன்றி அவர்களின் உரிமைகள் பறிக்கப் பட்டு, உடமைகள் எல்லாம் வேறொ ருவர் சொத்து ஆக்கப்பட்டு மிகவும் அவலநிலையில் உள்ளனர். தமிழர் களின் உயிர்கள் அழியும்பொழுது அவர்களின் இதயத்தில் விழும் அடி ஒவ்வொன்றாக கூடுகின்றது. 1973ல் 13 இராணுவ வீரர்கள் தமிழீழ விடு தலைப்புலிகளினால் மாண்டசெய்தி கேட்டு பொங்கியெழுந்தது சிங்கள சமுதாயம்.

அதனால் ஒன்றுமறியாத தமிழர் களின் சொத்துக்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டன. தமிழர் களின் உயிர்கள் காட்டு மிராண்டித் தனமாக பறிக்கப்பட்டன. தமிழ்ப் பெண்கள் சிங்கள இனவெறியரின் தசைப்பசிக்கு இரையாக்கப்பட்டுக் கொல்லப் பட்டனர், நாளைய சமு தாயத்தின் எதிர்கால சிற்பிகளான மழலைச் செல்வங்கள் எல்லாம் அவர் களின் கொடூரப்பசிக்கு இரையா கிறார்கள். அப்பொழுது இவை எல் லாவற்றையும் மனதினுள் சந்தோ சப்பட்ட சிறிலங்கா அரசு முதலைக் கண்ணீர் வடித்து ஆழ்ந்த அனுதாபங்களை பிறநாடு களுக்கு அறிவிப்பதற்காக தங்கள் பொன்னான வெகுஜனத் தொடர்பு சாதனங்களை முடுக்கிவிட்டது.

சர்வதேச மனித உரிமைகள் எல்லாம் பறிக்கப்படக்கூடாது. தமிழர்களின் இந்த நிலை கண்டு மனம் கலங்குகின்றோம். இதற்கு எல்லாம் ஒரு முடிவுகாண வேண்டும் என்று வட்டமேசை என்ற போலி யான ஒரு நாடகத்தை அரங்கேற் றியது இலங்கை அரசு.

## எமது பிரச்சனைகளும் தீர்வும்

(மாணவன் வயது 16)

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த இக்காலகட்டத்திலே எந்த ஒரு நாட்டை நோக்கினும் இனம் என்ற போர்வையில் பல வகையான பிரச் சனைகள் உருவாகியுள்ளன. இப்பிரச் சனைகளைத் தீர்ப்பதற்கு நாடுகளில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி யும், அப்பிரச்சனைகளைப்பற்றியும் மாணவர்களாகிய நாம் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும். எனவே தான் இக்கட்டுரையைத் தொடர் கிறேன்,

இலங்கை யுத்தத்தை எதிர் நோக்கியிருக்கும் இக்காலகட்டத் திலே இலங்கைத்தமிழர் பிரச்சனைகள் பற்றி சிறிது சிந்திப்போம், முதற் பிரச்சனை இலங்கைத் தமிழருக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அடக்குமுறைகளும், அட்டகாசங்களு மாகும். எந்த ஒரு தமிழனது உயிருக் கும் நிச்சயமில்லை. அதுவும் நமது தாய்நாட்டில், அடுத்த பிரச்சனை போக்குவரத்துக்கள் தடைப்படுவத

படிப்பகம்

www.padippakam.com



ளுல் ஏற்படும் உணவுப் பிரச்சனை. இதே நிலையில் நாடு சில காலத்திற்கு இருக்குமேயானுல் ஒவ்வொரு தமிழனுடைய ஆயுளும் நிச்சயக்கப்படுவது பட்டினிச்சாவால் மட்டுமே. இதே போல தமிழ் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் இன்று பாடசாலைக்குச் சென்றுல் எந்தக்கணத்திலே எழுந்தோடி வருகிருர்களோ என்று கூறமுடியாது. அன்ருடம் கூலிவேலை செய்து வாழ்க்கையை ஓட்டும் மக்கள் பிரச்சனைகளால் புலம்பெயரும்போது யார் அவர்களுக்கு உணவு வழங்குவது? யார் அவர்களுக்கு ஆதரவு செலுத்துவது? இவற்றையெல்லாம் மையமாக வைத்துப்பார்க்கும்போது ஒவ்வொரு இலங்கைத் தமிழனதும் கதி என்ன? இவற்றையெல்லாம் விஞக்களாக மாற்றும்போது பதில் என்ன? பதில் கூறுவது யார்? இவ்விஞக்கட்குப் பதில்களாக இன்றைய தமிழ் இளைஞர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம்.

இன்று தமிழ் இளைஞர்கள் பல பெயர்களிலே பல அமைப்புக்களை உருவாக்கி தமிழ்மக்களுக்காகதமிழ்த் தாயின் அடிமை விலங்கொடிக்கப் புறப்பட்டிருக்கிருர்கள். அதேவேளையில் தமிழ்மக்களின் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிருர்கள். தமிழ்ப் பிரதேசங்களிற் கிடைக்கும் மூலப் பொருட்களைக்கொண்டே உணவுஉற்பத்தியும், வேறுபல உற்பத்திகளையும் மேற்கொண்டு வருகிருர்கள். எடுத்துக்காட்டாக பனையின் வளங்களைப் பயன்படுத்தி பற்பல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். அத்துடன் விவசாய நிலங்களையெல்லாம் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவற்றிஞல் ஓரளவு உணவுப் பிரச்சனை நீங்குகிறது. மேலும் பிரச்சனையான காலகட்டங்களிலே மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குமுகமாக ஆங்காங்கே நியாயவிலைக் கடைகளையும் அமைத்துள்ளார்கள். இயன்றவரையில் பாடசாலை மாணவர்களின் கல்வியிலும் கவனம் செலுத்திவருகின்றனர். இவற்றின் மூலம் இலங்கை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் ஒரு சிறு பங்கேனும் குறைக்கப்படலாம்.

**''சிந்துகின்ற செங்குருதி செந்தமிழுக்கென்ருல் இச்செந் தமிழ் நாடே சிவப்பாகட்டும்'' என்கிருர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவர் கூற்றின் படி என்ருே ஓர்நாள் இத் தமிழ்நாடே சிவப்பாக மாறப் போகிறது.** ஆயுதம் மட்டும் அரசியலல்ல. இளைஞர் மட்டும் மக்களல்ல. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஆயுதம் ஏந்திஞல் மட்டும் பயன் கிடைக்கப் போவதில்லை. இளைஞர்கள் மட்டும் தான் பாடுபடவேண்டியதில்லை. தமிழ் மக்களாக பிறந்த எந்த ஒரு மனிதனும் முன்னின்று உழைக்க வேண்டும். தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எந்த விதத்திலாயினும் சரி பாடுபடவேண்டும். முதலில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சூழல் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்த்தல் வேண்டும். இப்படியாக ஒவ்வொரு மனிதனும் முன்னின்று உழைக்கும்போது நாட்டுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படலாம். அத்துடன் வரப் போகும் உணவுப் பிரச்சனையை தவிர்ப்பதற்கு கூட்டுமுயற்சியாக தரிசு நிலங்களைப் பயன்படுத்தி விவசாயத்தை மேற் கொள்ளலாம். நமது பிரதேசங்களிற் கிடைக்கும் மூலப்பொருட்களை வைத்தே உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இவற்றையெல்லாம் ஏற்றுமதி செய்வதன் மூலம் வரப்போகும் பொருளாதாரப் பிரச்சனையை ஓரளவு தீர்த்துக் கொள்ளலாம்.

அடுத்து தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் பற்றி

www.padippakam.com



மாணவர்களின் பங்களிப்பு பற்றி பார்ப்போம். இப்பிரச்சனை தீர்க்கப் படுவதற்கு மாணவர்களின் பங் களிப்பு நிச்சயம் அவசியம். ஆனல் அவ்வசியமே முழு முயற்சியாகி விடக்கூடாது. மாணவர்களாகிய எம்மையெல்லாம் முற்ருக அர்ப் பணிக்கும்போது வருங்காலத்தில் படித்தவர்களின் வீதம் மிகவும் குறை வாகவே காணப்படும். ஒரு பிரச்ச னைத் தீர்க்கப்படும்போது நாமேவேறு ஒரு பிரச்சனைக்கு வித்திடும் வகையி லான முயற்சியாகிவிடும். ஆகவே ஒவ் வொரு மாணவனும் படிப்பிலும் கவனம் செலுத்தியபடி தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ளலாம். எனவே தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் மாணவர்களின் பங் களிப்பு சரியானதே.

தமிழ் மக்களின் பிரச்சனைகள் ஆயுதமேந்துவதன் மூலம் மட்டும் தான் தீர்க்கப்படலாம் என்று இல்லை. மாணவர்களாகிய நாம் நிச்சயமாய் தோளோடு தோள் நின்று உதவு தல் வேண்டும். பிரச்சனைகள் தீர்க் கப்படுவது பற்றி மக்களிடையே நிலவும் மூடக் கொள்கைகளை மக் களிடம் இருந்து பிரித்தல் வேண் டும். ஒவ்வொரு தமிழனும் முன் னின்று உழைக்கும் வகையில் அவர் களை தயார்படுத்துதல் வேண்டும். நமது சமுதாயத்தில் இடம் பெறும் சீர்கேடுகளையெல்லாம் முதலில் திருத்துவதற்கு பாடுபடல் வேண் டும். அடுத்து தமிழ் இனத்தின் இன்னல்களையெல்லாம் களைந்தெறி யும் முகமாக நாம் தேவையான வகையில் பாடுபடவேண்டும். முத லில் நம் சுற்றத்தில் உள்ளவர்களது பிரச்சனைகளினின்றும் விடுபடப் பாடு பட்டு அடுத்து தமிழ் இனத்தின் பிரச்சனைகள் தீரும் வகையில் முயற்சி களை மேற்கொள்ளல் வேண்டும். ஆயுதமேந்தித்தான் தமிழ்மக்கள் பிரச்சனைகள் தீர்க்கப்படலாம் எனும் நிலை வரும்போது நாம் படிப்பிலும் கவனம்செலுத்தி போராடத் துணி தல் வேண்டும்.

மேற்கூறிய வகைகளில் இன்று தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச் சனைகள் பற்றியும் அதனைத் தீர்ப்பது பற்றியும், நமது பங்களிப்பு பற்றி யும் கூறி இக்கட்டுரையை முடிக் கிறேன்.

## இன்று இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

(வயது16—வகுப்பு10)

இலங்கையர்கள் ஆங்கிலேயர் வருகையால் உணவு, உடை பழக்க வழக்கங்கள், ஆட்சி முறை போன்ற வற்றில் நாகரிகமடைந்துவந்த னர். பின்னர் ஆட்சி சிங்களவர் கைக்கு மாற்றப் பட்டபின்னர் அவர் கள் இனவெறியர்களாகவும், இனத் துவேசம் உள்ளவர்களாகவும் தமி ழரை அடக்கி ஒடுக்கி வாழத் தொடங்கினர்கள். சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டு தமிழரின் சொத்து சுகங்கள், பெண்களின் மானம் என்பன சூறையாடப்பட் டன. இந்நிலைமை இனியும் நீடிக் குமாயின் தமிழ் இனம் முற்ருகவே அழிந்தொழியும் நிலைக்குத் தள்ளப் படும். எனவே ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை சிறிது ஆராய்வோம்.

இனவெறியர்களின் இத் தீச் செயல்களால் கல்வி முறைகளில் பாதகமான நிலைமை நீடிக்கும். அதாவது சிறுர்கள் கல்வி கற்கும் வேளைகளில் இராணுவ வெறியர் களின் அட்டகாசங்களால் பாடசாலை கள் அரைகுறையாக மூடப்படு கின்றன. கர்த்தால், உண்ணவிர தம் போன்றவற்றில் சிறுவர்கள் ஈடுபடும்போது கல்வியை ஒழுங்கா கக் கற்கமுடியாத நிலை. இதைவிட உயர்கல்வி கற்கும் மாணவர்கள்

www.padippakam.com



பரீட்சை எழுதும் வேளைகளில் குழப்பங்கள் நடைபெறுவதால் அமைதியாக பரீட்சை எழுத முடியாத நிலை. இதிலும் மேலாக இப்பரீட்சையில் ஒருவாறு சித்தியடைந்த மாணவன் பல்கலைக்கழகம் செல்லும் போது அங்கு எதிர்ப்பு. தரப்படுத்தல் ஒரு தலையிடி. இதனுள்ளும் பட்டப் படிப்பை முடித்து வெளியேறும் போது வேலைவாய்ப்பு இன்மை போன்ற பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

இதனையடுத்து உணவுப் பற்றுக் குறையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. பலர் எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக முகாமில் தங்க வேண்டியுள்ளனர். அவர்களுக்கு இயலுமான அளவு உணவு வழங்கும் பொறுப்பு நமது தமிழ்ப் போராளிகள் மீது விழுகிறது. ஆயுதம் ஏந்தும் கைகள் மக்களைப் பாதுகாத்து உணவளிக்கும் பணியை செய்வதனுல் அவர்களின் பணம் குறைகிறது. தமிழ் மக்களின் சுய உரிமை கிடைக்கும்போது சிங்கள அரசாங்கங்கள் வடபகுதிக்கு உணவு அனுப்புவதை தடைசெய்யும். எனவே பேனபிடித்த கைகளும் கலப்பை பிடிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் அவற்றிற்கு எவ்வளவோ பொருட்கள் தேவைப்படுகிறது. விவசாயத்திற்கு அதிகமானேர் இயந்திர மூலம் தான் நீரை இறைப்பதுண்டு. இதற்கு வடபகுதிகளுக்கு மண்ணெண்ணை விநியோகம் செய்வதில்லை நாம் துன்பப்பட்டு பயிர் செய்து அவற்றை விற்கும் போது சந்தைப்படுத்தும் வசதியின்மை, போக்குவரத்தின்மை ஆகியவற்றுல் நாம் பாதகமான நிலைக்கு தள்ளப் படுகின்றேம். பொருட்களின் விலை வீழ்ச்சியடையும்போது விவசாயிகள் பயிர்செய்வதை விட்டுவிடுவார்கள். இதனுல் நாட்டில் பெரும் வறுமையையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவற்றினூடாக அரசாங்கத்தை நினைக்கும் போது பெரும் கோபம் தான் வரும். சிங்கள மக்களும், தமிழ்மக்களும் இந்தியாவிலிருந்து வந்தோம். ஆனல் அவர்களுக்கு சொந்தமான நாடு தமிழருக்கும் ஏன் சொந்தமாகக் கூடாது? யார் தான் பதில் சொல்ல முடியும். சிங்கள அரசாங்கமே ஒரு அடி நிலம் கூட தமிழனுக்கு கொடுக்க முடியாது என்று சொல்கிறது. நாம் சற்று பொறுத்திருந்து தான் பார்ப்போம். உதாரணமாக மகாபாரதத்தை பார்க்கும்போது கௌரவரில் மூத்தவனை துரியோதனன் பாண்டவருக்குரியதான நாட்டைக் கொடாமல் விட்டதோடும் அவர்களுக்கு பல துன்பங்கள் செய்தான். ஆனல் இறுதியில் பாண்டவர் கைக்குத் தான் நாடு சொந்தமாகியது. இதே போல ஒரு காலமும் தர்மத்திற்கு அழிவு கிடையாது. எமக்கென நமது நாட்டை ஒப்படைத்தால் நாம் ஒரு வித பிரச்சனையுமின்றி இன்பமாய் வாழ்வோம். அதுவரைக்கும் நாம் சிறிது சிந்தித்துப்பார்த்து விழிப் புணர்ச்சியுடன் இருந்து நமது ஈழத்தை வென்றெடுப்போம். □

www.padippakam.com

# புரட்சிப் பூக்கள் மலர்கின்றன...

குறுங்கதை

வன்னிப்பிரதேசத்தில் காட்டை அண்டிய வறிய கிராமம். இக்கிராமத்தில் 40 குடிகள் வசித்துவருகின்றன. இதில் வேலனின் குடும்பம் ஒன்று. வேலனின் குடிசையில் அவனும் அவனது மனைவியும் ஐந்து குழந்தைகளும் வசித்துவருகிறார்கள். மூத்தவன் 8வயது நிரம்பிய சிறுவன் கந்தன், இரண்டாவது 6 வயது நிரம்பிய சிறுவன் ராசா, மூன்றுமவள் 4 வயது நிரம்பிய பாக்கியம், நான்காவது குழந்தை 3 வயதுடைய அர்ச்சுனன், ஐந்தாவது 1 வயதுடைய கடைக்குட்டி புனிதம்.

வேலன் பத்து வருடங்களுக்கு முன் இரண்டு ஏக்கர் காட்டை அழித்து கழனியாக்கித் தான் இதில் அவன் உளுந்து பயறு மிளகாய் மரவள்ளி போன்ற பயிர்களைச் செய்து வந்தான். இதன் மூலமும் மாடு வளர்ப்பின் மூலமும் தனது குடும்ப சீவனப்பாட்டை சிரமத்தின் மத்தியில் ஓட்டினுன். மூத்த இரு சிறுவர்களும் அக்கிராமத்திலுள்ள பாடசாலைக்குச் சென்று ஆரம்பக் கல்வி கற்றுவந்தார்கள். வேலன் தனது மூத்த மகனின் படிப்பை இடைநிறுத்தி தனக்குஒத்தாசையாக வைத்துக்கொள்ள எண்ணினுன்.

அப்பொழுதுதான் அந்த இனக் கலவரம் இடம்பெற்றது. இக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் தமது உடன் பிறந்தவர்களையும், உடமைகளையும், இழந்து வெட்டுக்காயங்களுடன் வன்னிப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் அகதிகளாக வந்து சேர்ந்தார்கள். இதுபற்றி கந்தன் தெரிந்துகொள்ள ஆவலாய் தனது தகப்பனிடம் கேட்டான். ''இவர்களை யார் அப்பா அடித்து துரத்தினுர்கள்? இதற்கு வேலன் ''சிங்களவர்கள்தான் இவர்களின் உடமைகளைக் கொள்ளையடித்துவிட்டு இவர்களின் உடன் பிறந்தவர்களையும் கொலை செய்துவிட்டு இவர்களை அடித்துத் துரத்தியுள்ளார்கள்'' எனக் கூறினுன். அதற்கு கந்தன் ''ஏன் அப்பா அவர்கள் அடித்துத்துரத்தினுர்கள்'' வேலன் சிறிது நேரம் யோசித்துவிட்டு ''அவர்களுடைய கிராமங்களில் இவர்கள் வாழ்ந்ததினுல்'' எனக் கூறினுன். கந்தன் அடுத்த கேள்வியைக் கேட்க வாயைத் திறந்தபோது ''டேய் நீ போய் உனது வேலையைக் கவனி'' எனச் சத்தமிட்டான்.

பாடசாலையில் குடியேறிய அகதிகளில் சில குடும்பங்கள் அக்கிராமத்தை அண்டிய காட்டுப்பகுதியில் குடியேற்றப்பட்டனர். அப்பொழுது கந்தன் மூன்றும் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். இக்கலவரத்தின் பின் சிலமாதங்கள் பாடசாலைகள் நடைபெறவில்லை. வேலனுடன் ஒத்தாசையாக வேலை செய்வதற்காக கந்தனுடைய படிப்பு (பாடசாலை

www.padippakam.com



நடைபெறுதலைச் சாட்டாக வைத்து) இடைநிறுத்தப்பட்டது.

இதன்பின் காலையில் தனது தகப்பனுக்கு ஒத்தாசையாக தோட்ட வேலையில் ஈடுபட்டு, காலை ஆகார மாக பழங்கஞ்சியைக் குடித்துவிட்டு மத்தியானத்திற்கென தாயார் சமைத்து வைத்த சோத்துப் பொட் டலத்தையும் எடுத்துக்கொண்டு மாடு களை மேய்ச்சலுக்காக சாய்த்துசென்று பிற்பகல் வீடு திரும்புவதே இவனது நாளாந்த வாழ்க்கையாக இருந்தது. மாடுகளை புல் வெளியில் மேய விட்டு விட்டு மரநிழலின் கீழ் குந்தியிருக்கும் இவனது சிந்தனை பலவழிகளில் செல்லும். அடிக்கடி பாடசாலையில் தங்கியிருந்த அகதிகள் பற்றியும் அவர்கள் கூறிய கலவரத்தையும் பற்றி எண்ணி தனக்குள்ளே பல கேள்விகளை தொடுத்து சிந்தனை செய்வான்.

இவனது கிராமத்தில் அகதிகள் குடியேற உதவி செய்த சில இளை ஞர்கள் (இயக்கத்தைச் சேர்ந்த வர்கள்) தொடர்ந்து அக்கிராமத்தில் பண்ணை செய்வதில் ஈடுபட்டு வந் தனர். இவ் இளைஞர்கள் அக்கிராமப் பகுதி மக்கள் மத்தியில், அவர்களுக்கு இவ் அரசாங்கங்களால் ஏற்படுத்தப் பட்ட கொடுமைகளையும். இன்று நிலவும் பொருளாதார அமைப்பின் சீர்கேடுகளையும் பற்றி எடுத்துக் கூறினார்கள். இவ்விளைஞர்கள் அக் கிராம மக்களுடன் நன்கு பழகுவதி லும், அம்மக்களின் சுகதுக்கங் களில் பங்கு கொள்பவர்களுமாகி அக்கிராம மக்களுடன் தங்களையும் இணைத்துக்கொண்டார்கள். இவ்வி ளைஞர்கள் அக்கிராமத்திலுள்ள சிறு வர்களுக்கு மாலை வேளையில் எழுத, வாசிக்க ஆரம்ப கல்வியை கற்றுக் கொடுத்தார்கள். இளைஞர்களின் செயற்பாடுகளும், நடைமுறைகளும் கந்தனைப்போன்ற சிறுவர்களை அவர் களுடன் இணைத்தன. கந்தனைப் போன்ற ஒருசிலர் இவ்விளைஞர் களிடமிருந்து எமது நாட்டுப்பிரச்சனை பற்றியும், மக்களின் பிரச்சனை பற்றி யும் போராட்ட வழிமுறைகள் பற்றி யும் தாக்குதல்கள் கேள்விகள் பற்றி யும், கேட்டுப்புரிந்து கொண்டார்கள்.

கந்தன் தனது படிப்பு இடை நிறுத்தப்பட்டதற்கான உண்மைக் காரணம் குடும்ப வறுமையே என் பதை உணர்ந்தான். இதுபோல் தனது கிராமத்திலுள்ள இளைஞர்க ளின் கல்வியும் இடையில் நிறுத்தப் பட்டதற்கான காரணமும் அவரவர் குடும்ப வறுமையே என்பதை உணர்ந்த அவன், இந்த சமுதாய அமைப்பே இதற்கான அடிப்படைக் காரணம் என்பதையும் புரிந்துகொண் டான். பதினாறு வயதே நிரம்பிய சிறுவனாகக் காணப்படும் கந்தன் தமிழ்பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளையும், இன்றைய அர சாங்கத்தின் கெடுபிடிகளையும் நன்கு புரிந்துகொண்டு தர்க்கீக ரீதியில் செயற்படத்தொடங்கினான்.

கந்தன் தனது கிராமம் போன்ற அயல்கிராமங்களுக்கு கருத்துக்களைக் காவிச்சென்று இளைஞர்கள் மத்தியில் விதைத்தான். புரட்சிக்கருத்துக்களைப் புரிந்துகொண்ட இளைஞர்கள் புரட்சி அமைப்புடன் தம்மையும் இணைத்துக் கொண்டார்கள்.

இவ்விளைஞர்கள் தமது தாய் தந்தையாருக்கு இன்று தமிழ்பேசும் மக்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலையகத் திலும் வாழுகிறார்கள் என்றும் அவர் கள் எதிர்நோக்கும் இன அடக்கு முறைகளையும், வர்க்க ஒடுக்கு முறை களையும் தெளிவு படுத்தி, போராடிப் பெறப்போகும் ஈழம் எவ்வாறு அமை யும் என்பதையும் அங்கு மக்கள் எவ்வித கூட்டுறவு அடிப்படையில் வாழ்வார்கள் என்பது பற்றியும் எடுத்துக்கூறி அவர்களையும் புரட்சி யின் பங்காளிகளாக இணைத்துக் கொண்டு வருகிறார்கள். புரட்சிக்கருத் துக்கள்காட்டுத்தீபோல் பரவத்தொட ங்கியுள்ளது. ஆயிரமாயிரம் புரட்சி மலர்கள் மலரத்தொடங்கியுள்ளன. □

www.padippakam.com

# போராடும் ஈழம்:

## ஆதரவிற்கான அறிக்கை




கடந்த செப்டம்பர் மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒரு தீவான மின்தானேவில் உள்ள இல்லிகனில் நடைபெற்ற சர்வ தேச மகாநாட்டில் மாணவர் இளைஞர் 'பொது' மன்றம் (GUYS) தனது பிரதிநிதியை கலந்து கொள்ளச் செய்ததன் மூலம் எமது போராட்டத்திற்கான ஆதரவினை திரட்டிக் கொண்டது. இந்த மகாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் ''போராடும் ஈழம்'' என்பதனை அங்கீகரித்துக் கொண்டதுடன் தமது ஆதரவினையும் வழங்கினர். இதன் வெளிப்பாடே பின்வரும் அறிக்கை.

படிப்பகம்

www.padippakam.com



இல்லீகன் பிரதேசத்தில் கடந்த செப்டம்பர் 26-28 தினங்களில் மொய்திரி ஆசிய ஆதரவு மகாநாட்டில் (MOITREE ASIAN SOLIDARITY CONEERENCE) மின்தாஞேவின் பல பாகங்களில் இருந்தும், ஆசிய பிராந்தியத்தில் பங்களா தேசம், இந்தியா, இந்தோனேஷியா, ஸ்ரீலங்கா, பிலிப்பைன்ஸ் ''போராடும் ஈழம்'' ஆகிய நாடுகளிலிருந்தும் 120 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்களாக புனித நம்பிக்கையுடன் எமது ஆதரவினை ஆசிய பிரதேசத்தில் சுரண்டல், ஒடுக்குதல் போன்றவற்றிற்கு எதிராக போராடும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவினை வழங்க இணைந்து கொண்டுள்ளோம்.

இங்கு கலந்து கொண்ட பிரதிநிதிகளின் நாடுகளது நிலைப்பற்றி எம்மிடையே ஏற்படுத்திய கலந்துரையாடல்கள் மூலம் எமது நாடுகளின் அடக்கு முறை, சுரண்டல் பற்றி தெளிவான நிலையினை எம்மிடையே பரிமாறிக் கொண்டோம். இந்த நாடுகள் தொடர்ச்சியான காலனித்துவ வரலாற்றினைக் கொண்டுள்ளதுடன் மாத்திரமல்லாது திட்டமிட்ட அடக்குமுறை ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. தற்போது இந்நாடுகளில் நிலவிவரும் நிலப்பிரபுத்துவம் முதல் முதலாளித்துவம் வரையிலான ஒடுக்கு முறைகள் பெருமளவு மக்களை மனித நேயமற்ற நிலைக்குட்படுத்தியுள்ளது. இதனடிப் படையில் உற்பத்திப் பொருட்களும் அதன் லாபங்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களாலும், உள்நாட்டு பலமிக்க மேனிலைக் குழுக்களாலும் மட்டும் அனுபவிக்கப்பட்டு வருகின்றது.

அரசியல் அதிகாரமானது இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செலுத்தும் ஒரு சிலரது கைகளிலேயே மத்தியப் படுத்தப்பட்டுள்ளது. எவ்வாருயினும் இந்நாடுகள் ஜனநாயக் கோட்பாட்டினடிப் படையில் கட்டப்பட்டிருந்தாலும் உண்மையான ஜனநாயகம் என்பது இங்கு எள்ளவும் இல்லை. மாருக முற்ருன மனித உரிமை மீறல்களும் ஒடுக்கு முறைகளும் தேசிய பாதுகாப்பின் கீழ் நடைபெற்று வருகின்றது.

இந்த அனைத்து சமூகங்களும் பலமிக்க வெளிநாட்டு அரசியலாதிக்கத்திஞல் அடக்கப்பட்டும், பல் தேசிய கூட்டுத் தாபனங்களால் சுரண்டப்பட்டும், வருகின்றன. இந்நாடுகளில் உள்ள விவசாயிகள் பல விதத்திலும் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். முக்கியமாக சிறுபான்மையான ஆதி குடிமக்கள் தமது வாழ்வு நிலங்களில் இருந்து பலவந்தமாக விரட்டப்பட்டு ஒதுக்கப்பட்டு வருகின்றனர். இந்த சமூகங்களுக்கு செழுமை மிக்க பாரம்பரியமும் வரலாறும், கலாச்சாரமும் ஆன்மீக வழமைகளும், காலனித்துவ நவ காலனித்து ஆதிக்கத்திஞல் பாதிப்புற்று வருகின்றது. கல்வியும் சமயமும் இந்த சுரண்டலுக்கான ஒரு ஆயுதமாக பிரயோகிக்கப் படுகின்றது. இங்கு பெண்கள் பல விதத்திலும் தமது நிலைகளில் இருந்து அடக்கி ஒடுக்கப்பட்டு வருவதனையும் காணலாம்.

இவ்வாருன அடிப்படை நிலைமைகளிலும் எமது வறுமை, பஞ்சம் போன்ற நிலையிலும் எமது துணிவும், தீர்மானமும் எமது மக்களை இணைத்து உலகளாவிய

www.padippakam.com



திட்டமிட்ட ஒடுக்குமுறை அடக்குமுறை என்பவற்றுக்கு எதிராக போராட முன்வைத்துள்ளது. எமது மக்களின் பல்வேறுபட்ட போராட்ட வடிவங்கள் போராட்ட குறிகாட்டிகளாக இருந்து விடுகின்றன. மாற்றமடைகின்ற கல்வி முறைகள்; சுகாதார வேலைத் திட்டங்கள்; தொடர்பு சாதனங்கள்; வாழ்வு நிலையில் பொருளாதார முறைகள்; ஆன்மீக தொடர்புகள், கேளிக்கைகள் வீதி யோரத்து பாராளு மன்றங்கள்; ஆயுத எதிர்ப்புக்கள் என்பன இவ்வகையினதாக அமைகின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதோடு அவர்களை எமது பொது எதிரியாக இனங் கண்டு எதிர்ப்புப் போராட்டத்தில் அனைவரும் இணைந்து கொள்கின்றோம். அனைத்து நாடுகளது சுய நிர்ணய போராட்டத்திற்கு எமது ஆதரவினை அளிப்பதுடன் எமது கரங்களையும் இணைத்துக் கொள்கின்றோம்.

நாங்கள் ''தமிழ் மக்களது போராட்டத்தில்'' அவர்களது நாட்டை மீட்பதற்கான போராட்டத்தினையும், மோரோ மக்கள், ஆசிய பிரதேசத்தில் வாழும் ஆதி குடிமக்களது சுயநிர்ணயப் போராட்டத்தினையும் அங்கீகரிப்பதுடன் ஆதரவினை வழங்குகின்றோம். நாங்கள் அமெரிக்க இராணுவ தளங்களை ஆசிய பிராந்தியத்திலிருந்து அகற்றவும் குறிப்பாக பிலிப்பைன்சு நாட்டிலிருந்து அகற்றவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

விடுதலை விரும்பும் அனைத்து உலக மக்களையும் எம்முடன் இணைந்து ஆதரவளிக்கும்படியும் நீதிக்காவும், அமைதிக்காகவும், விடுதலைக்காகவும் போராடும் அனைவருக்கும் எம்முடன் இணைந்து ஆதரவளிக்கும்படி அனைத்து உலக மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

-கலந்து கொண்ட பிரதிநிதிகள்-
மொய்திரி ஆசிய ஆதரவு மகாநாடு

செப்டம்பர் 26-28-1985

இல்லீகன் நகரம்

பிலிப்பைன்ஸ்

(இந்த ஆதரவு அறிக்கை பிலிப்பைன்ஸ் நாட்டு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. ஆனால் வேறுபட்ட தலையங்கங்களை கொண்டு வெளியிடப்பட்டது. உதாரணமாக மலாயா பத்திரிகையில் தமிழ் மக்கள் போராட்டத்திற்கு ஆசிய நாடுகள் அங்கீகாரம், என்ற தலைப்பிலும் Communication என்ற சஞ்சிகையில் ஆதரவு அறிக்கை என்ற தலைப்பிலும் வெளியாகின).

□□□

# ஒரு போராளியின் பிறப்பு

நான் அந்த மாங்கனிக்காக
ஆண்டியானவன் அல்ல
அடக்குமுறைகளால் அகதியாக்கப்பட்டவன்
நான் கோவணத்துடன் சென்றது
அகங்காரத்தில் அல்ல
அதைவிட வேறு உடையில்லாததால்
நான் இரண்டு கல்யாணம்
செய்தவன் அல்ல
இளமையை இன்னும் அனுபவிக்காதவன்
நான் அடுத்த பிறப்பிற்காக
பாவங்களை சுமக்க வந்தவனல்ல
இந்தப்பிறப்பின் கொடுமைகளை
அறுக்க வந்தவன்
நான் சுமந்து வருவது
சிறு சிலுவையல்ல
அவை நெஞ்சைப் பிரிக்கும் மண்மூடைகள்
நான் நனைந்தது
வெறும் மழையிலல்ல
விறைக்கும் பனியிலும், கொதிக்கும் தீயிலும்
நான் அறையப்பட்டது
சிலுவையிலல்ல
சிறைச்சுவர்களிலும் சித்திரவதை முகாம்களிலும்
நான் இறந்து போனவர்களுக்கு
புத்துயிர் கொடுப்பவன் அல்ல
உயிரோடு இருப்பவர்களுக்கு
புத்துணர்ச்சி கொடுப்பவன்
நான் கோபப்படுவனல்ல
சிந்தித்து செயலாற்றுபவன்
நான் கொலை வெறியன் அல்ல
குற்றவாளிகளை தண்டிப்பவன்
நான் அமைதியை இழந்தவன் அல்ல
அடிமைத்தளையை உடைக்க
மட்டும் ஆயுதமேந்தியவன்
இத்தனைக்கும் நான் கற்பனைகளால்
கட்டப்பட்ட கடவுள்அல்ல
நிஜங்களால் உருவாக்கப்பட்ட போராளி!
நான் இறக்கும்போது
இவ்வுலகம் அதிரப் போவதில்லை
நட்சத்திரங்கள் சிதறப்போவதில்லை
இராணுவ முகாமில்
எங்கோ ஒரு மூலையில்
எனது உடல் புதைக்கப் பட்டிருக்கும்
இங்கு நடைபெறும் புரட்சிக்காய்-மேலும்
ஒரு அடி எடுத்து வைக்கப் பட்டிருக்கும்.

www.padippakam.com



# ஈழப் போராட்டமும் - சீர்குலைக்கும் மூலகங்களும்

## போதை வஸ்து கடத்தலில்இரு இலங்கையர்

சுவிற்சலாந்து பொலிஸாரால் ஜெனிவாவில் கைது செய்யப்பட்ட இந்திய பிரஜையின் வாக்கு மூலத்தின் பிரகாரம் தென் மேற்கு பிரான்சில் சிறிலங்காவைச் சேர்ந்த இரு தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த நவம்பர் மாதம் 26ம் திகதி ஜெனிவா விமான நிலையத்தில் சாந்தி நல்லசாமி என்ற 30 வயது பெண் மணி கைது செய்யப்பட்டார். இவர் பிரயாணத்திற்கு உபயோகித்த பொதிகைப் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3.1 கிலோ கிராம் ஹிரோயின் கைப்பற்றப்பட்டது. பின்னர் இவர் விடுதலை செய்யப்பட்டார். இவரைப் பின் தொடர்ந்த பொலிஸார் போர் டெயல் என்னும் பகுதியில் இவருடன் தொடர்பு கொண்ட இரு ஸ்ரீலங்காவைச் சார்ந்தவர்களை பிரான்சு பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் தர்மன் ராஜரட்னம் மத்தியூ வயது 29, செல்லையா சுரேஸ் நியூமன், வயது 29, ஆகியோராகும்.

நியூஸ்'டுடே - மார்கழி 5

படிப்பகம்

www.padippakam.com



## ஸ்ரீலங்கா தமிழர்கள் போதை வஸ்து குற்றச் செயலில்

ரோம் பங்குனி 18, 1985

நீதித் துறையினர் 100 இலங்கைத் தமிழர்களை சர்வதேச போதை வஸ்து கடத்தல் கும்பலுடனான தொடர்பு காரணமாக கைது செய்துள்ளனர். இது பற்றிய செய்திகளில் இந்த பணத்தின் பெரும்பகுதி ''தமிழ் கொரில்லாக்களுக்கு'' கொடுக்கப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. அச்செய்தியில் இவ்வாறான சந்தேக நபர்களில் பெரும்பாலானோரின் நாக்குகள் வெட்டப்பட்டுள்ளனவாம், இது இச்சர்வதேச கும்பலின் உண்மைகள் வெளிப்படாது இருக்கும் வண்ணமும் செய்யப்பட்டுள்ளது.

—நியூஸ்டுடே

எமது ஐந்தாவது இதழில் ''வித்தியாசமான விபச்சாரிகள்'' என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு சீர் கெடுக்கும் தொலை காட்சி பற்றி ஒரு தொலை நோக்கு'' என்ற கட்டுரையின் கீழ் ஈழப் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையிலான சில நிகழ்வுகளை எடுத்துக் காட்டினோம்; இந் நிலையில் புரட்சி இயக்கங்கள், புத்தி ஜீவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து இந்த மழுங்கடிக்கும் மூலகங்களை நிர்மூலமாக்கும் வகையில் எமது நிலையைப் பலப்படுத்தி போராட அறை கூவல் விடுத்திருந்தோம். இந்த சமூக விரோத நடவடிக்கையின் வரிசையிலும், எடுத்துச் செல்லப் படுகின்ற எமது நியாய பூர்வமான போராட்டத்தை களங்கப்படுத்தும் வகையில் மாத்திரமல்லாது ''எதிர் புரட்சியாளர்களை'' புதிய வடிவில் உருக் கொடுக்கும் மூலகங்களை இனங் கண்டு கொள்ள வேண்டிய அவசியம் எம்முன்னே பரந்து கிடக்கின்றது. இங்கு ''நாங்கள்'' வெளிக்கொணரப் போகும் இந்தச் சமூக விரோத மூலகங்கள் பல்வேறு வடிவங்களில் பல்வேறு அமைப்புக்களினூடாக உருவாக்கப் பட்டு வருகின்றது.

கடந்த சில காலங்களாக உலகின் பல பாகங்களிலும் 'போதை வஸ்து' கடத்தல், உபயோகம் இதனாலான சீரழிவுகள் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இக் குற்றச் செயலில் ஈழவர்கள் குறிப்பாக மாணவர்களும், இளைஞர்களும் எவ்வளவு தூரம் இணைக்கப் படுகின்றனர், அல்லது பலவந்தமாக இணைக்கப் பட்டுள்ளனர் என்பதனையும் நோக்க வேண்டும். சில நாட்களின் முன்னர் சென்னையில் அண்ணா நகர் பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் வேட்டையில் சிக்கிக் கொண்ட இரு ஈழத்தைச் சார்ந்த போதை வஸ்து விற்பனையாளர்கள் ஈழப் போராளிகளது முக மூடியை அணிவித்துக் கொண்டு விடுதலையாளுர்கள். இது மாத்திரமல்லாது பல நாடுகளில் கைது செய்யப்பட்ட இவர்கள் தமது போதை வஸ்து கடத்தலுக்கு

www.padippakam.com



ஈழப் போராட்டத்தை இணைத்து காட்டியுள்ளனர். எனவே ஈழப் போராட்டத்திற்கும் இந்த குற்றச் சம்பவங்களுக்கும் இடையில் உள்ளதான தொடர்பு பற்றிய சரியான கண்ணோட்டத்தினை எமது மக்கள் முன் விமர்சிக்க வேண்டிய தேவை தொடர்ந்து இவ்வினங் கண்டு கொள்ளப்பட்ட சீர்கெடுக்கும் மூலகங்களை வகைப்படுத்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும்.

விடுதலைப் போராட்டத்தில் இணைந்து விடுகின்ற சக்திகள் சரியான அரசியல் சிந்தனைகள் மீட்கப்படாது விடின் இவர்கள் சில சமயங்கள் புரட்சிகரப் போக்கிலிருந்து விடுபட்டு எதிர் புரட்சி வாதிகளாக அமைந்து விடுகின்றனர். இந் நிகழ்வும் உலகப் போராட்ட வரலாறுகள் எமக்கு தந்து விட்ட பாடமாக விளங்குகின்றது. இவர்களது நடவடிக்கைகள் விடுதலைப் போராட்டத்தில் பெரும் பிரச்சனையாகவோ அன்றி பின்னடைவுகளாகவோ மாற்றமடைகின்றது. இவ்வாறே இங்கு நாம் குறிப்பிடுகின்ற ''சமூக விரோதச் செயல்களில்'' ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபடுத்தப்படும் மூலகங்கள் கூட அமைந்து விடுகின்றது. இவ்வரிசையில் பலியாக்கப்படுகின்றவர்கள் பெருமளவில் மாணவர்களாகவும், இளைஞர்களாகவும் விளங்கி விடுவதால் நாம் இவ்விடயத்தில் பெரும் நிதானமான நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதனைத் தெளிவு படுத்துவதே எமது கட்டுரையின் நோக்கமாகும். இவவாறு இணைகின்ற மாணவர்களும் இளைஞர்களும் கிடைக்கப் பெறுகின்ற செல்வத்தினை கண்டு மலைத்து போய் நிற்கின்ற அவ்வேளைகளில் இவர்களை வலிந்து வரவேற்கும் சில கோரிக்கைகள் இவர்களது நிலைமைகளை முற்றாக மாற்றியமைத்துவிடுகின்றது. இதனடிப்படையிலேயே இவர்களது வாழ்வு முறை சீரழிக்கப்பட்டு, சீரழியும் மேற்கு நாடுகளின் வாழ்வு முறையின் ஒரு சில நிகழ்ச்சிகளுடன் இணைக்கப்படுகின்றது. விபச்சாரம், தன்னினச்சேர்க்கை, போதைவஸ்த்துகளுக்கு அடிமையாதல் போன்ற இன்னோரன்ன குற்றச் செயல்களுக்கு உள்ளாகின்றனர். இன்று போராட்டத்தில் இருந்து தப்பிவிடுவோம், அல்லது தப்பிக்க வைக்கும் நோக்கில் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் பெற்றோர்கள் சற்று இது பற்றிச் சிந்திக்க வேண்டும். இந்த போதை வஸ்து உபயோகமானது எவ்வளவு தூரம் 'பாலியல்' நோக்கி ஒவ்வொருவரையும் ஈர்த்துக் கொள்கின்றது என்ற அம்சம் இவை உபயோகமாகும் மையங்களை நோக்குமிடத்து புலனாகும். இன்று பயங்கரமான நோயாக விளங்கிவரும்-தன்பால் சேர்கை (homosex) மூலமான எய்ட்ஸ் (AIDS) நோய் இவ் விளைவுகளின் விடையாகவே அமைகின்றது.

இதனை அந்நாடுகளில் கூடிய அளவு போதை வஸ்த்துக்கள் இளைஞர்களால் மட்டுமல்லாது ஈர்க்கப்பட்ட அனைவராலும் உபயோகப் படுகின்றது என்பதனையும் அதனூடான ''தன்பால் காமம்'' (GAYS) முனைவு படுகின்றது என்பதனையும் ஒப்பிடின் புலனாகும். ஐக்கிய அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் அங்கீகாரம் பெற்ற தன்பால் காமமும் போதை வஸ்த்துக்களின் உபயோகமும் எய்டஸ் (AIDS) நோயின் பரவலை எமக்கு விளக்கு கின்றது. இங்கு இவை எமது இளைஞர்கள், மாணவர்

www.padippakam.com



களிடையே எவ்விதத்திலும் பரவக் கூடாது என்பதனுலேயே விளக்கியுள்ளோம். அதாவது இவ்வாறு அடிமைப் படுகின்ற ஒவ்வொருவரும் தொடர்ந்து இதனை வேட்கையை தீர்த்துக் கொள்ளவே தூண்டப்படுவர். இந்நிலையில் இவர்களது நிதி பற்ருக் குறையாக காணப்பட்ட காரணமாக இவர்களது பெற்ரேர்கள் ஈடுவைத்த நிலங்களும், நகைகளும், கடன்களும் காரணமாக அமைந்து நிற்கும். எனவே தீர்த்துக் கொள்ள வழி வகைகளை தேட வேண்டிய அத்தியாவசியம் ஏற்படுகின்றது. இவ்வாருனவர்களை எதிர் கொள்ள சர்வதேசக் கும்பல்கள் ஆயத்தமாக வுள்ளது.

இந்த நாச சக்திகள் ஓரளவில் சில அமைப்புக்களுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ளன. இதனைத் தவிர்த்து சில தனிப்பட்ட நபர்களை பணத்துக்கு விலை பேசி இணைத்துக் கொண்டுள்ளனர். இவ்வாறு பின்னர் கூறப்பட்ட விலைபோகும் கயவர்கள் இரு அடிப்படையில் இந்த கடத்தல் கும்பல்களிடம் விரும்பியோ விரும்பாமலே இணைக்கப் படுகின்றனர். தமது செல்வ நிலையை வளப்படுத்துக் கொள்ள வேண்டிய எமது அடிப்படை சமூக அமைப்பின் சீர் குலைவினுல் குடும்ப நிலைமையை மேம்படுத்த செல்வம் தேடி வெளிநாடுகள் நோக்கி படை யெடுக் யெடுக்கின்றனர். இந்த தன்மை ஒரு பொறியாகவும், செல்வ போகங்களை இலகுவாக அடைந்துவிட இந்த கடத்தல் கும்பல்கள் காட்டும் வழியாக இந்த குற்றச் செயலில் இவர்கள் அறிந்தும், அறியாமல் ஈடுபட்டு விடுகின்றனர். இன்று இவர்களது தளங்களாக தமிழ் நாடு அமைந்து விடுமோ ; அல்லது எமது விடுதலைக்கு பெரும் ஆதரவினை தந்து விட்ட தமிழ் நாடு இவ்வாறு எமது மக்களில் ஒரு குறுகிய பகுதியினர் வயிற்றுக் குழிகளை நிரப்பும் இந்த நட வடிக்கைக்கு பலி போய் விடக் கூடாது. என்ற நோக்கம் இங்கு எம் கடமையாக நிற்கின்றது. இந்த வகையில் எமது போராட்டத்தை முன்னெடுக்கின்ற ஒவ்வொருவருமோ அல்லது பின்னணியாக நின்று முன்னடுப்புகளை வளர்த்து விடுபவர்கள் பிரதிபலிக்கும் தன்மைகள் கூட இந்த 'குற்றச் செயலை' வளப்படுத்த வழியாக அமைந்து விடுகின்றது.

விடுதலைப் போராட்டங்களிலோ அல்லது காலனித்துவாதிக்கத்துக்கான போராட்டங்களிலோ இந்த போதை வஸ்துக்கள் இணைக்கப்பட்டு வந்துள்ளமை வரலாற்றுக் காலமாக இருந்து வருகின்றது. சீனுவை அடிமைப் படுத்தும் வகையில் உருவான 'அபின் யுத்தம்' முதல் இன்றைய லத்தின் அமெரிக்க நாடுகளில் விடுதலைப் போராட்டங்களில் கூட இந்த போதை வஸ்துகள் போராட்டத்தை முறியடிப்பவையாகவே இருந்து வருகின்றது. இந்த வரிசையில் ''பயங்கரவாதிகள்'' என அழைக்கப்படுகின்ற கொலம்பிய நாட்டு விடுதலை போராளிகள் கூட சிக்குண்டமை இங்கு நினைவு கூறப்படல் வேண்டும். இவர்கள் இந்த சர்வதேச கும்பலுடன் இணைந்து அதாவது கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படையானது தமது போராட்டத்திற்கு தேவையான தளவாடங்களை கொள்வனவு செய்யும் வகையில் செயலாற்றுகின்றனர். விடுதலைப் போராட்டங்களில் மாத்திரமல்லாது முற்போக்கு அரசாங்கங்களை வீழ்த்தி விடும் வகையில் இந்த ''போதை வஸ்து'' கடத்தல் நடவடிக்கை

www.padippakam.com



கள் இணைக்கப் படுகின்றன. பொலிவியா, பேரு, பிறேசில் போன்ற நாடுகளில் இந்த சர்வதேசக் கும்பல்கள் போராட்டத்திற்கு எதிரான போராட்டமாக இயங்கிவருகின்றது. இந்த சரித்திரத்தின் களங்க ஏடுகள் எமது போராட்டத்தில் இணைக்கப்படுகின்றதா, இந்த போதை வஸ்த்துக்களால் அப்பாவி மக்களை அடிமைப்படுத்துகின்றோமா? இந்த அடிமைப்படுத்தலின் அத்திவாரங்களில் எமது அடிமை விலங்குகள் ஒடிக்கப்பட வேண்டுமா? என்பன பற்றி நிச்சயம் நாங்கள் பாராமுகமாக இருந்து விட முடியாது. சில சிந்தனை தெளிவற்றவர்களும் இந்த சர்வதேச கும்பல்களுடன் எமது போராட்டத்தை இணைத்து பெறப்படுகின்ற யுத்த தளவாடங்களை எதிரிக்கு எதிராக உபயோகிக்கின்றனர் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால் இந்த புதிய விலங்கொடிப்பு நடவடிக்கை எவ்வளவு தூரம் எமது மக்களை புதிய ''போதை வஸ்த்து'' விலங்கினுள் அமிழ்த்தி விடுகின்றது என்பதனை ஸ்பெயின் சிறையில் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட 136 தமிழர்களை உதாரணமாக எடுத்துப் பார்க்கலாம். ரீகன் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் ''US DRUG ENFORCEMENT ADMINISTRATION போதை வஸ்த்து பற்றி ஆராய்ச்சிகள் மூலம் இவற்றை எவ்வாறு போராட்டங்களை சிக்க வைக்கும் வழிவகைகளை ஏற்படுத்தி வருகின்றது என்பது இதிலிருந்து புலனாகின்றது. எனவே இன்று உலகத்தின் பார்வை எம்பக்கம் திருப்பிய ''ஈழப் போராட்டம்'' சரியான நிதானமான போக்கில் கொண்டு செல்லப் படல் வேண்டும். இதற்கான ஆய்வுகளை கொண்டு இவற்றை முறியடிக்க வேண்டியது அனைத்து ஈழவர்களது கடமையாகும்.

இந்த வஞ்சக வலையில் எவ்வாறு ஈழப் போராட்டத்தை வீழ்த்துவது என்பதுபற்றி இந்த போதை வஸ்து கடத்தல் கும்பல்கள் கைதேர்ந்தவர்களாக விளங்குகின்றனர். ''முதலில் அகதிகளாக்கப்பட்டவர்களை விடுத்து, அகதிகள் அல்லது தஞ்சம் கோருபவர்கள், வெளிநாடு சென்று செல்வம் திரட்ட விரும்பும் எமது மக்களின் ஒரு பகுதியினரிடமே இவர்களது கவனம் செல்கின்றது. பின்னர் இவர்களை எவ்விதத்திலும் அணுகுகின்றனர். ''ஒரு பிரச்சனையுமில்லை நாங்கள் அனைத்தையும், கடவுச்சீட்டு உட்பட செய்து முடித்துவிடுவோம். ஒரு பொதி கைப் பெட்டியினை (Suit Case) கொண்டு செல்ல வேண்டியது மட்டும் தான் உங்கள் பொறுப்பு; விமானநிலையத்தில் சுங்க அதிகாரிகள் கூட தயார் செய்யப்பட்டு விட்டனர்'' எனக் கூறி தம்மை அறிமுகம் செய்து கொள்கின்றனர். கைச் செலவிற்கும், பிரயாண காசோலையாகவும் 2000 டொலர்கள் இப்போது தருகின்றோம். மிகுதி நீங்கள் குறிப்பிட்ட பெட்டியை கைமாற்றியதும் குறிப்பிட்ட இவர்களது முகவர்கள் (AGENTS) பணமாக தருவார்கள் என ஆசை வார்த்தை காட்டுகின்றனர். ஓரிரு கிழமைகளில் இவ்வாறு ஆசை வார்த்தைகளில் வீழ்த்தப் பட்டவர்கள் தயாராக்கப் படுகின்றனர். விமான நிலையத்தில் எவ்வித பிரச்சினையுமின்றி விமானம் ஏறுபவர்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்ட 'உல்லாச விடுதி' தொலைபேசியுடன் இவர்கள் தொடர்பு கொண்டு ஒரு குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து விடுகின்றனர். அங்கு பெட்டிகள்

படிப்பகம்

www.padippakam.com



கைமாற்றப்படுகின்றன. சிலர் தமது இந்த குறிப்பிட்ட வேலைகளுக்கு கூலிகளைப் பெற்று விடுகின்றனர். பலர் ஏமாந்து விடுகின்றனர். இவ்வாறு ஏமாற்றப்பட்டவர்கள் மீளவும் தாம் விமானம் ஏறிய நாட்டிற்குவந்து மீள முடியாது அலைந்து திரிகின்றனர். இவ்வாறு இந்த சர்வதேசக் கும்பல்களின் ''எவ்வித பிரச்சினையுமில்லை'' என்ற வாதத்தினை எம்மவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிரச்சனைகள் ஒருபுறமிருக்கட்டும் ஒவ்வொரு உயிர் வாழும் பிரேதத்தினூடாக எமது செல்வங்கள் திரட்டப்படல் வேண்டும். அதில் நாங்கள் சுகபோகங்களை அடைய வேண்டும் என்பதில் நீங்கள் இணக்கம் கொள்கின்றீர்களா ?

எனவே இன்று எமது போராட்டம் சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும். எதிரிகள் யார் என்பதனை இங்கு நிதானமாகவும், ஆழமாகவும் முடிவாகவும் சிந்திக்க வேண்டும். சர்வதேச ரீதியாக இணைந்து செயலாற்றி வரும் இவர்கள் எமது விடுதலைப் போராட்டத்தில் கருங்காலிகளாகவே இனங்கண்டு கொள்ளப்படல் வேண்டும். தமது வயிற்றுக் குழிகளையும் ஆசா பாசங்களையும் மாத்திரம் கருத்தில் கொண்டு செயலாற்ற முனையும் இவர்கள் ஒருபுறமும் எதிரியின் நண்பர்களாக விளங்கும் இந்த கும்பல்கள் ஒருபுறமும் நின்று எமது போராட்டத்தை நசுக்க முனைகின்றனர். இது தவிர்க்கப்படல் வேண்டும் இனங்கண்டு கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வேளையில் அனைத்து சக்திகளும் இணைந்து கவனமாக இருந்து இனங் கண்டு கொள்ளப்பட வேண்டிய இந்த ''மூலகங்களை'' ஒதுக்கி வைக்க வேண்டிய கட்டாயம் எங்களனைவருக்கும் உண்டு. இவ்வாறுனவர் பற்றி எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும். இவ்வாறுனவர்களின் நடவடிக்கைகள் பற்றி சற்று ஐயப்பாடுகள் தோன்றினுல் கூட உடனடியாக நடவடிக்கைகளில் இறங்கி விடுங்கள். இவை எமது போராட்டத்தின் முன்னெடுப்பு பாதைகளில் காணப்படும் தடைக்கற்களை அகற்றுபவையாகவே அமைந்துவிடும். எனவே இன்று இந்த வலைக்குள் பெருமளவில் சிக்குகின்ற அல்லது வலை விரிக்கப்படுகின்ற மாணவர்களும் இளைஞர்களும் இந் நிலைபற்றி சற்று சிந்திக்க வேண்டும். நாளைய விடியலின் தலைவர்களான நீங்கள் சற்று நிதான புத்தியுடன் இருந்து விடுவது விரிக்கப்படுகின்ற வலைகளை அறுத்தெறிந்து விடுவதாக அமைந்து விடும். □

## லங்கா மாணவர் சம்மேளன ஆதரவு

''எமது இயக்கம் நீதிக்காக மேற்கொள்ளும் தமிழர்களின் போராட்டத்தை பூரணமாக ஆதரிக்கிறது. அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டிக்கிறோம்.

83-ம் ஆண்டு ஜூலையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொலை செய்யப்பட்ட தமிழ்க் கைதிகள் தொடர்பான விசாரணை மறைக்கப்பட்டுவிட்டது. தங்காலைச் சிறையிலும் தமிழ்க்கைதிகள் இம்சைக்குள்ளாகியுள்ளனர். இதனையும் தடுத்து நிறுத்த வேண்டும் என வேண்டி நிற்கிறோம்.'' என லங்கா- மாணவா சம்மேளனம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

www.padippakam.com

விடுதலையின் பெயரால் விடுதலையின் பெயரால் விடுத லையின் பெயரால் விடுதலையின் பெயரால் விடுதலையின்

# விடுதலையின் பெயரால்

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் எமது போராளிகளுக்கு ஆதரவாக ஈழத்தின் அனைத்துப் பகுதிகளி லும் மக்களே முன்வந்து ஊர்வலங்களையும் உண்ணாவிரத நிகழ்ச் சிகளையும் நடாத்தி போராட்டத்தில் தமது பங்கை செவ்வனே செய்து வருவது பாராட்டத்தக்கதோர் விடயம். இச்சந்தர்ப்பத்தில் இங்கே உள்ள இயக்கங்கள் பலவும் தாமே முன் நின்று ஊர்வலங்களையும் உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடாத்தின. இங்கு வேதனைக் குரிய அம்சம் யாதெனில் ஒவ்வொரு இயக்கமும் தனித்தனியே ஊர் வலங்களையும் உண்ணாவிரதங்களையும் நிகழ்த்தி தமக்குள்ள ஆதரவை ஒன்றுக்கொன்று காட்டிக் கொள்ளும் முகமாக போட்டிபோட்டன. இப்படிப்பட்ட மனநிலையானது மக்களை துன்பத்தில் ஆழ்த்தக்கூடிய சில கேவலமான செயல்களில் சில இயக்க அங்கத்தினரை ஈடுபட வழிவகுத்துள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர்களும், ஊழியர் களும் பெரும்பகுதியினர் தாமாகவே முன்வந்து ஆரம்பத்தில் ஊர் வலங்களிலும் உண்ணாவிரதங்களிலும் பங்குபற்றினர். ஆனால் இங் குள்ள சில இயக்கங்கள் மக்களின் உணர்வுகளை மதியாது வெறு மனே தமது செல்வாக்கினையும், விளம்பர மனப்பாங்கினையும் மைய மாகக் கொண்டு ஒழுங்கற்ற முன்கூட்டியே திட்டமிடாதவகையில் ஏதேச் சையான முறையில் ஊர்வலங்கள் ஹர்த்தால்கள் நடத்த முற்பட்ட போது மாணவர்களும் ஊழியர்களும் தொடர்ச்சியாக சகல நிகழ்வு களிலும் பங்குபற்ற கூடிய சூழ்நிலையை கொண்டிருக்கவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் இங்குள்ள மக்கள் போராளிகள் என தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் சில அமைப்புகளை சேர்ந்த இளைஞர் சிலர் பாடசாலைகள், அலுவலங்களுக்குள் புகுந்து பயமுறுத்தி தமது ஊர் வலங்களுக்கும் உண்ணாவிரதங்களுக்கும் ஆள்சேர்க்க முற்பட்டனர். இதன் அடிப்படையில் நடந்த சில சம்பவங்கள் எம்மை அதிர்ச்சிய டையவைத்துள்ளன.

★ சில கல்லூரிகளில் புகுந்து பயமுறுத்தி சிலர் தமது அமைப்பின் ஊர்வலத்தில் பங்குபற்ற வற்புறுத்திய சந்தர்ப்பங்களில் பீதி யடைந்த மாணவ மாணவியர் சிலர் கல்லூரி ஆய்வு கூடங்க ளிலும் மலசல கூடங்களிலும் ஒளிந்திருக்க வேண்டிய நிலை.

★ யாழ் மாவட்டத்தில் உள்ள சில பாடசாலை அதிபர்களுக்கு இந்த மக்கள் போராளிகள் (?) எனப்பட்டோரால் பாடசாலை மாண வர் முழுப்பேரையும் வீடுசெல்ல அனுமதியாது தம்மிடம் ஒப்

படிப்பகம்

www.padippakam.com



படைக்காததற்காக கொலைப் பயமுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டனர். ஒரு மகளிர் கல்லூரியின் பெண் அதிபரைக் கேவலமான வார்த்தைகளால் பயமுறுத்தியிருக்கின்றனர்.

★ சில பாடசாலைகளில் மாணவர்கள் அங்கு சென்ற இந்தச்சமூக விழுமியங்களால் கல்லூரி அறைகளில் வைத்துப் பூட்டப்பட்டு பின் வாகனங்களில் ஏற்றப்பட்டு கட்டாயமாக, நிர்பந்தித்து தமது அமைப்புகள் சார்பில் ஏற்படுத்தப்பட்ட ஊர்வல உண்ணாவிரத நிகழ்ச்சிகளுக்கு இட்டுச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

இச்சம்பவங்கள் மக்களை பெரிதும் வேதனைக்குள்ளாக்கக் கூடியவை. மக்கள் தாமாக உணர்ந்து உந்தப்பட்டு போராட முன்வர வேண்டுமே தவிர ஆயுதமுனையில் அல்லது பயமுறுத்தி போராட்டத்திற்கு அழைத்துவர சில தனிநபர் குழுக்கள் முயற்சி செய்யின் அதன் விளைவுகள் விபரீதமாக ஆக்கும். இப்படிப்பட்ட ஒருசில சம்பவங்கள் கூட போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நேர்மையான தியாக உணர்வுமிக்க போராளிகள் மீது கூட மக்கள் சந்தேகம் கொள்ள வேண்டிய துயரமான சூழ்நிலையை ஏற்படுத்திவிடும்.

மக்களை மதியாது மக்கள் உணர்வுகளை புரிந்துகொள்ளாது கைகளில் ஆயுதத்தை ஏந்திவிட்டதனுல் அனைத்தும் நாமே என்ற **உணர்வுடன் செயற்படும் பிற்போக்குக்கும்பல்கள் போராட்ட வரலாற்றில் அதிகநாள் நிலைத்திருந்ததில்லை.**

---

## அக்கரையை நோக்கி ஒரு குரல்

திம்புவில் தீர்வு
தீர்ந்து போயிற்று
உரிமை உணர்வில்
உயிர் வாழும் மனிதர்க்கு
உணவளிக்க...
சில எலும்புத்துண்டங்கள்
வழங்குவதாக
அடக்குமுறை அரசும்
அக்கரை எஜமானரும்
சுற்றி இருந்து பேசி ...
தீர்மானித்துக் கொண்டார்கள்
''ஓ'
அக்கரைப் பிரதமரே
இங்கே
இனவெறி அரசு
புத்தனின் காதில்
பொருத்திய பூக்களில்
ஒன்றைச் கச்சிதமாய்
உம் காதில்....
வைத்ததனுல் தானே
அபயம் தேடி
அலையும் எம் மக்களுக்கு
முதுகிலே முட்டி
கடல் நடுவில்
சரிப்பீரோ—
நேற்றைய இரவுகளில்
உங்கள் சாணக்கியங்கள்
சத்தமிட்டு பாடிய
போர் நிறுத்த தாலாட்டில்
எம்மக்களும்—
துப்பாக்கியும் தோழர்களும்
துப்பாக்கித் தோழர்களும்
சற்றும் உறங்கவில்லை
சத்தமிட்டும் சொல்கிறோம்
இங்கே ஈழத்தில்
எம்மக்கள்—
தனித்து தாமே....
சுதந்திர காற்றுக்கு
பிரசவமளிப் பர்
அப்போது இங்கே
எம்மக்கள்—
அவலங்கள் துயரங்கள்
மரணங்கள் மரணிக்கும்
நிச்சயமாய் ...
நிரந்தரமாய்....
□

www.padippakam.com

# ''சாகும் வரை உண்ணுவிரதம்'' போராட்டத்தின் புதிய பரிணுமம்

கடந்த சில மாதங்களின் முன்னர் ஸ்ரீலங்காவின் சிறைச்சாலை களில் பல்வேறுப்பட்ட சித்திரவதைகளின் மத்தியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஈழப் போராளிகள் மனந்தளராத உறுதியுடன் நடத்திய போராட்டம் ஸ்ரீலங்கா அரசினை நிச்சயம் நிலைக் குலையச் செய்திருக்கும் என்பது நடந்து முடிந்த வரலாறுகள் எம்முன்னே விரிந்து கிடப்பதன் மூலம் அறிய முடிகின்றது. நமது சகோதரர்கள் மேற் கொண்ட ''சாகும் வரை உண்ணுவிரதம்'' நிச்சயம் போராட்டத்தின் புதிய பரிணுமம் என்பது எவ்விதத்திலும் மறுக்க முடியாது.

மனிதாபிமானம் மரத்துப்போன சிறீலங்காவின் சித்திரவதை முகாம்களில் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருக்கும் இனிய சகோ தரர்களை எண்ணிஞல் எங்கள் முன்ஞலுள்ள பெரும் பணியின் தன்மை களை உணரலாம். சிறீலங்கா தானே போட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்படி கூட பதினெட்டு மாதங்கள் வரையில் தான் ஒருவரைச் சந்தேக நபர் என்ற அடிப்படையில் தடுத்துவைக்க முடியும். அதை யும்கூட மதிக்காமல் பதினெட்டு மாதங்களை வெஞ்சிறையில் கழித்த பின்னரும் கூட விசாரணை செய்யாமல் அடைத்து வைத்திருக்கின்ற கொடுமையை வெளிக்காட்ட சாகும்வரையில் உண்ணுவிரதம் மேற் கொள்ளத் தீர்மானித்தனர் அக் கைதிகள். அதனுலேயே ''விடுதலை செய் அல்லது விசாரணை செய்'' என்று கோரிக்கையை முன்வைத்து தமக்கு சாத்தியமான ஒரு போராட்டத்தில் அந்த இளம் கைதிகள் குதித்தனர். கடந்த ஆகஸ்ட் எட்டாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ் உண்ணுவிரதம் கிட்டத்தட்ட ஒருமாதத்தை எட்டிக் கொண்டு இருக் கின்றது. அந்தத் தீரர்களின் உடல்நிலை பற்றியோ அவர்கள் முன் வைத்துள்ள கோரிக்கைகள் பற்றியோ எந்தவிதமான அறிவித்தல் களையும் இந்தத் தரங்கெட்ட அரசு வெளியிடவில்லை. பதிலுக்கு உண்ணுவிரதிகளின் தார்மீக பலத்தைக் குறைக்குமுகமான தனிமைப் படுத்தல்களை மட்டுமே மேற்கொண்ட போதிலும் மேலும் மேலும் பல கைதிகள் இன்று நடவடிக்கைகளில் இறங்கி வருவதனை உணர முடிகின்றது.

இதேபோல் அயரிஷ் விடுதலைப் போராட்டத்தில் கைது செய்யப் பட்டவர்களுக்கு அரசியல் அந்தஸ்து வழங்கக் கோரி பொபி சான்ட்ஸ் (BOBY SANDS) பெல்பாஸ்ட் (Bel fast) சிறையில் உண்ணுவிரதத் தை ஆரம்பித்தார். அயரிஷ் குடியரசு இராணுவம் (IRA) என்னும் அமைப்பைச் சேர்ந்த இந்தப் போராளி 79 நாட்கள் உண்ணுவிரதத் தின் பின் சிறையிலேயே மரணித்தான். பெல்பாஸ்ட் நகரமே அதிர்ந் தது. இப்போராளியின் மரணம் உலகின் மனச்சாட்சியை உலுக் கியது. மூலை முடுக்குகளெல்லாம் அவன் கோரிக்கை எதிரொலித் தது. அந்த எதிரொலி இலங்கையிலும் பலத்த தாக்கத்தினை ஏற் படுத்தியதை அச்சமயம் தெளிவாகவே உணரப்பட்டது. இதற்குச் சற்றும் குறையாத வகையில் சிறீலங்கா அரசின் மனிதாபிமானமற்ற நடத்தைக்கு எதிராக இதனை அம்பலமாக்கும் எண்ணத்தோடு-அடக்கு முறைகளைத் தோலுரித்துக் காட்டிட எங்கள் மண்ணின் இளம் சகோ

படிப்பகம்

www.padippakam.com

தரர்கள் தங்களையே பலிக்கடாக்களெனப் பிரகடனம் செய்து போராடி வருகின்றனர்.

இருண்டு கிடக்கும் சிறிலங்காச் சித்திரவதை முகாம்களில் எம் மவர்கள் எப்படியுள்ளனர்? எழுத—வாசிக்க எவையுமே கிடைப்பதில்லை. கலந்துபேசவும் கூடத் தடை விதிக்கப்பட்டு உள்ளது. சித்திரவதை களுக்கு மட்டும் குறைச்சலே இல்லை. வதைகளை உண்ணும் இந்த மனிதர்கள் கனவுகளில் மட்டுமே திளைக்க முடிகின்றது. 'நான் மடியலாம்' ஆனுல் நமது போராட்டம் மடியாது என்ற ஒரே நம் பிக்கைதான் இவர்களின் ஊன்று கோலாயுள்ளது.

இவர்களைப் போல போராடப் புறப்பட்ட சிலர் தங்காலைச் சிறை யில் கொல்லப்பட்டது தெரிந்ததே. இந்தக் கொலைகளின் மூலம் எமது போராட்டத்தைக் கொன்றுவிட முடியாது என்பதை இரத்தம் படிந்த அந்த ஜூலையில் வெலிக்கடைப்படுகொலைகளின் பின்னுவது அரசு உணர்ந்து கொண்டு இருக்கவேண்டும்.

இந்தப்போராட்டத்திற்கு ஆதரவாக - விடுதலைசெய் அல்லது விசாரணை செய் என்ற கோரிக்கையின் நியாயத்தை உணர்த்தும் முகமாக—எங்கள் நாட்டின் பொபி சான்ட்ஸ்களை உலகுக்கு அறி விக்குமுகமாக பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் மற்று முள்ள அமைப்புகளும் நடாத்திவரும் போராட்டங்கள் உலகின் கண் களை உறுத்தும். பெல்பாஸ்ட் நகரம் அதிர்ந்ததுபோல ஈழமெங்கும் எழும்பும் உணர்வலைகள் ஈழப் போராட்டத்தின் நியாயபூர்வ அம் சங்களை உலக்கு வெளிச்சம் போட்டுக்காட்டும். நாளை நமது மண்ணை மீட்கும் பயணத்தில் புதியதொரு அத்தியாயத்தை எழுதிக்காட்டும்.

## ஸ்ரீலங்காவின் புகழ்பெற்ற சித்திரவதை முகாம்களான வெலிக்கடைச் சிறையிலிருந்து:

**'வரலாற்றில் ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டங்கள் என்றுமே தோற்றதில்லை.**

**அனைத்துப் பல்கலைக் கழக**
மாணவர்கட்கு!

மிகவும் இக்கட்டான நிலையில் இக்கடிதத்தை எழுதுகின்றேன். எம்மீது திணிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மிகவும் கொடுமையானவை. அதைவிட இப்போது புதிய புதிய சட்டங்களை தம் இஷ்டம்போல் நிறைவேற்றி எம்மீது திணிக்கிறுர்கள்.

அதற்கும் மேலாக சட்டங்களையும் மதியாது 18 மாதங்கள் முடிந்த பின்பும் இங்கு பலரை தடுத்து வைத்துள்ளனர். அவர் களுக்கு எதிராக நடவடிக்கைகள் எதுவும் எடுக்காது 18 மாதங்கள் முடிந்த பின்பும் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இதுபற்றி நிர்வாகத்திற்கும் மேலிடங்களுக்கும் அறிவித் தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இறுதியாக பாதுகாப்பு அமைச்சிற்கு எங்கள் கோரிக்கை நிறை வேறும் வரையில் ''சாகும்வரை உண்ணுவிரதப் போராட்டம்'' ஆரம்பிக்க உள்ளோம் என நீண்ட இடைவெளி கொடுத்து அறி வித்தும், அதற்கு எவ்வித முடிவும் கிடைக்கவில்லை. மேற்கூறியபடி 8-8-85இல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

படிப்பகம்

18 மாதங்கள் முடிந்தவர்களை விடுதலைசெய் அல்லது விசாரணை செய்! இதில் இரண்டு இரண்டு பேராகப் போராட்டத்தில் குதிக்கின்றனர்! கோரிக்கை நிறைவேற்றப்படும் வரைக்கும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும்.

இப்போராட்டத்தில் முதற்கட்டமாக பேராதனைப் பல்கலைக்கழகம் 82-83 கல்வியாண்டு விஞ்ஞானபீட மாணவன் சுரேஷ் யாழ்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை கனகரட்ணம், மலையக ஆனால் வவுனியாவில் வசிக்கும் கருணாகரன் ஆகியோர் 8-8-85இல் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதைத் தொடர்ந்து இவ்வாறு ஏனையோரும் போராட்டத்தில் குதிக்க உள்ளோம்.

இதற்கு ஆதரவாக பல்கலைக் கழக மாணவர்களும் போராட்டம் நடத்தவேண்டும் என சிறைக்கைதிகளாகிய ஏனையோரும் நானும் எதிர்பார்க்கிறோம். வெகுசனங்களும் எமது போராட்டத்திற்கு ஆதரவாக போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் செய்வது நல்லது. வேறு விசேடமில்லை. முடிக்கிறேன்.

கைதியாகவுள்ள.........

உணவின்றி எம் உடல்
உலர்ந்து போயிற்று
புலன்கள் செயலற்று
வலுவிழந்து...
நாம் மரணத்துக்காக
காத்திருக்கிறோம்.
இருந்தாலும் ஈழவர்க்காய்
எம் வாழ்வை இழக்கும்
பெருமையில் மகிழ்வாய்
மெல்ல...மெல்ல மரணிக்கிறோம்.

□□ கடந்த முப்பது நாட்களுக்கும் மேலாக சோவனிச சிங்கள அரசின் சிறைச் சுவர்களிடையே இவர்களின் உறுதிமிக்க போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக ஈழமெங்கும் உண்ணாவிரதங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதும் உலகெங்கணும் உள்ள மனுதாபிமான சக்திகளின் ஆதரவுக் குரல் எழும்பியுள்ள தென்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'நாங்கள்' உங்களிடம்

ஈழப் போராட்டத்தை இன்று ஈழவர்கள் பல இழப்புகளின் மத்தியிலும் தளராது முன்னெடுத்துச் செல்லும் இந்த இக்கட்டான கால கட்டத்தில் உங்களது தர்க்கீக ஆதரவு எமது போராட்டத்திற்கு ஒரு தூணாக அமையும் என்பதனை மறுப்பதற்கில்லை. கொலை வெறிபிடித்த சிறிலங்கா சோவனிச அரசின் செயல்களைக் கண்டிக்கும் வகையிலான உங்கள் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எவ்வாறு ஆதரவாக அமையும் என்பது நாளைய நிகழ்வுகள் உங்கள் முன் வரலாருக அமையப் போகின்றது. ஜெயவர்தன அரசினை கண்டிக்கும் ''எதிர்ப்பு கடிதங்கள்'' ஊர்வலங்கள் துண்டு பிரசுரங்கள் எமது போராட்டத்திற்கு இன்று அத்தியாவசியமானவை. உங்கள் எதிர்ப்பு கடிதங்களை

''திரு ஜூலியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தன,
ஜனாதிபதி
ஜனாதிபதி மாளிகை
கொழும்பு-1
ஸ்ரீலங்கா

www.padippakam.com

என்ற விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள். உங்கள் எதிர்ப்புக் களுக்கான எவ்வித ஊக்கங்களையும், தேவையான விபரங்களையும் ''நாங்கள்'' தர ஆயத்தமாக உள்ளது. விபரங்களை திரட்ட விரும்புவர்கள்

''நாங்கள்''
மாணவர் இளைஞர் பொது மன்றம் (GUYS)
த. பெ. இலக்கம் 2356
சென்னை-600024

என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். □



# குட்டான்

கடுமையாக போதைப்பொருள் கடத்தல்-பாவித்தல் காரண மாக ஏராளமான ஈழவர்கள் குறிப்பாக மாணவர் இளைஞர்கள் ஈடுபடுவதையிட்டு மலைப்படைந்ததாலோ என்னவோ 'குட்டானின்' பக்கங்கள் இடம் பெறச்செய்ய குட்டானால் முடியவில்லை. ஆனா லும் எவ்வகைத் தடைகளையும் மீறி தன்னைச் சுதாரித்துக் கொண்டு மீண்டும் அவர் தனது வாசகர்கள் முன்னால் வரு வார்...

தற்போது இவர் எதிர்பார்ப்பதெல்லாம் எமது மாணவர் இளைஞர்கள் இவ்வகையான சமூக விரோதச் செயலில் ஈடுபடாமல் எதிர்காலத்தில் ஈழத்தின் வளத்தை நிர்ணயிக்கும் முற்போக்கான சக்திகளாக உருவெடுக்க வேண்டுமென்பதே.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

''மாணவர்கள் அனைத்து மக்களுடனும் இணைந்தே போராட வேண்டும். மாணவர்களது அடிப்படைப் பிரச்சனைகள் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டு தீர்க்கப்படல் கூடாது. மக்களுடன் வேறுபட்டு மாணவர்கள் தேசிய, மற்றும் விஞ்ஞானபூர்வமான, மக்கள் கலாச்சாரப், போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. இவை மக்களுடன் இணைந்த போராட்ட மாகவே அமையவேண்டும். மாணவர்கள் தம்மிடையே அரசியல் உணர்வினையும், போர்க்குணத்தையும் இணைத்துக்கொள்வது அனைத்து மக்களது தேசிய, ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பவையாக அமைய வேண்டும்.''

—மரியா சேன்

●

ஈழ மண்ணில் போராடி வாழும் மாணவர், இளைஞர் பொது மன்றத் தோழர்களால் **15—9—'85, 5—11—'85** தேதிகளில் வெளியிடப்பட்ட 6-ம், 7-ம் 'நாங்கள்' இதழ்கள் இங்கு இணைக்கப்பட்ட இதழாக வெளி நாடுகளிலுள்ள தோழர்களுக்காக மறுபதிப்பு செய்யப் பட்டு **4—2—'86**இல் வெளியிடப்படுகின்றது.

**நாங்கள் 6—7**

தொடர்பு:
**நாங்கள்**
த. பெ. எண். 2356
சென்னை - 600 024.

கற்பதற்காகப் போராடுங்கள்
போராடுவதற்காகக் கற்றுக்கொள்ளுங்கள்.

படிப்பகம்